முரசொலி

ஆசிரியர்: மு.கருணாநிதி

2 அணா

முரசு 1 | சென்னை 7—1—55 வெள்ளி | ஒலி 41

தஞ்சைத் தாரகை

தஞ்சை ராஜகோட்டைக்கு அழைத்துச் செல்லும் பெரிய சாலை அது. வேற்றாரும் மாற்றாரும்அடியெடுத்துவைக்க முடியாத அரசாங்கப் பாதை. "இளவரசி வாழ்க! குந்தவை அம்மையார் வாழ்க, வாழ்க!" என்ற பேரொலியோடு அரண்மனை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்த முத்துப் பல்லக்கு திடீரென்று நிறுத்தப்படுகிறது. படை வீரர்கள் பல்லக்கை வைத்துவிட்டு முன்னேக்கி ஓடுகிறார்கள் இளவரசிகுந்தவை வீரர்கள் ஓடிய திக்கை நோக்குகிறாள். அந்திக் கதிரவனின் ஒளி பட்டு வீரர்படையின் வாட்கள் மின்னலிடுகின்றன. வாட்போரின் பேரிரைச்சல் கேட்கிறது. சமரில் வல்லவன் ஒருவன் சோழர் படையின் நடுவே நின்று போர்புரிகிறான். குத்துக்கும் வெட்டுக்கும் அஞ்சாத அந்தக் கட்டிளங் காளையை, விடாது போரிடும், களைப்பும், வியர்வையும் எண்ணெயில் அமிழ்த்தி எடுத்தவனைப்போலாக்கிற்று. குந்தவையின் கூர்விழிகள் அந்தப் பொன்னிறமேனியானை போருக்கஞ்சா வேங்கைப் புலியை வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. தான் சோழர்குல இளவரசி என்பதையும், தனது படைதான் பகைவன் ஒருவனோடு போராடிக் கொண்டிருக்கிறது என்பதையும், மறந்து, அந்த ஒற்றை வீரன், சோழர் படையைத்தாக்கும் போது இதயக் குளிர்ச்சியும், சோழர்படை அவனைச் சூழும்போது தாங்கொணு வேதனையும் அடைகிறாள் குந்தவை தேவி. போர் முடிகிறது, சினம் கொண்ட அந்தச் செங்கண்ணன் சோழர் படையால் கைது செய்யப்பட்டு இளவரசியிடம் கொண்டுவரப் படுகிறான்.

குந்தவை:- படைத்தலைவரே, கண்ணில் பட்டவர்களையெல்லாம் புண்படுத்தி கைதாக்கி கடுஞ்சிறையில் தள்ளவா தந்தை கட்டளையிட்டுள்ளார்?

படைத்:- மன்னிக்க வேண்டும் அம்மையாரே, கைது செய்யப்பட்டு இதோ தங்கள் முன்பாக கூண்டுக்கிளியாக நிறுத்தப் பட்டிருக்கிறனே இந்த நெஞ்சழுத்தக்காரன், இவன் அப்பாவியல்ல தேவியாரே; இவனுடைய மருண்ட பார்வை இவனை மாற்று தேசத்துக்காரன் என்பதையும், மடியிலே வைத்திருக்கும் பிச்சுவா பேர்போன ஒற்றன் என்பதையும் நிரூபிக்கவில்லையா? சோழர் குலத்திலகமாம் தங்களண்ணன் ராஜேந்திரனின் வாளுக்கிரையான சாளுக்கிய ராஜ்யம் பிணக் காடாகிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மாற்றான் நமது மண்டலத்தில் புகுவது மன்னிக்க முடியாத குற்றமில்லையா? இவனைத் தப்பிவிக்கச் செய்திருந்தால் தளபதி வல்லத்தரசு தீராக் கோபமடைய மாட்டாரா? சொல்லுங்கள் இளவரசி!

குந்தவையின் கண்கள் கைதியையே மொய்த்துக் கொண்டிருக்கின்றன கீரல் பட்ட ரத்த வடுக்களிலிருந்து செந்நீர் கசிந்து கொண்டிருக்கிறது — வீரனின் உடலெல்லாம்/ சித்தப்பிரமை கொண்டவனைப் போல அந்த இளைஞன் மாமரத்து மீதிருந்த இருமைனு பறவைகளை மட்டும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

குந்:- படைத்தலைவரே, சோழ சாம்ராஜ்யத்தில் குற்றம் ருசுவாகும் வரையில் கைது செய்யப் பட்டவர்களெல்லாம் குற்றவாளிகளல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நினைக்கிறேன்...

படைத்; நன்கறிவேன் தேவி/

குந்: இதோ இந்தக் கைதிக்கு நீங்கள் காட்டும் மரியாதையும் கண்காணிப்பும் சோழ மண்டலத்தின் கண்ணியத்தை வளர்ப்பதாக இருக்கவேண்டும் இளந் தலைவரே! தனி மனிதனிடம் காட்டும் பணிவிடையும் அன்பும்தான் மணி முடிகளைக் காக்கவல்ல பேரரணுகும்! இம்ம்! பல்லக்குபுறப்படட்டும்!

படை: கட்டளை இளவரசி!

பல்லக்கு புறப்படுகிறது. "இளவரசி வாழ்க! குந்தவை தேவி வாழ்க! என்ற பேரொலி முழங்குகிறது சோழர் அரண்மனையின் மதிற்சுவர் தெரிகிறது.

சாளுக்கியத்திலே சிங்காதனம் யாருக்கென்ற தகராறு. பட்டத்திற்குரியவன் மூத்தோன் வழி வந்தவனு, அல்லது சிற்றப்பன் மக்களா என்ற பிரச்சினை களத்திலே கொண்டுபோய்ச் சேர்த்துவிட்ட நேரம் அது. சாளுக்கிய சிங்காதனத்திற்கு உரிமைப் பட்ட மூப்புடையோர் உதாசீனம் செய்யப்பட்டு, இளையோன் வாரிசாக வந்தவர்கள் மகுடம் சூட்டிக் கொண்டு அரசாட்சி நடத்திய காலம். போர் மூண்டது. வீட்டுக் குழந்தைகள் விளையாட்டுப் பொம்மைகளை உடைப்பதுபோல களத்திலே தலைகள் உருளுகின்றன. ராஜேந்திர சோழன்—குந்தவையின் அருமாந்த அண்ணன்—நீதியின் சார்பாக வாளேந்தி சாளுக்கியக் களம் புகுந்திருந்தான். வாழ்வில் தோல்வியே கண்டிராத ராஜேந்திரன் நிச்சயம் வாகை சூடி வருவான் என்ற நம்பிக்கை தஞ்சை அரண்மனையில் அனைவருடைய உள்ளங்களிலும் வேரூன்றி இருந்தது.

இந்த இக்கட்டான நேரத்தில் தான்—போர்க்கோலம் பூண்டு தஞ்சை இளவரசன் நியாயத்திற்குப் பரிந்து சாளுக்கியப் பகுதியில் பாடிவீடு அமைத்திருக்கும் ஆபத்தான வேளையில்தான்— அவன் தங்கை குந்தவை தேவி வழியிலே தென்பட்ட அநாதை வீரனிடம் உள்ளத்தைக் கொடுத்து விடுகிறாள்

✶

கோட்டை வாயில் திறக்கப்படுகிறது. முத்துப் பல்லக்கு அரண்மனைக்குள் போகிறது. வாழ்த்தொலி குறைகிறது. அந்திக் கதிரவன் மறைகிறான். அரச கோட்டையைச் சுற்றி தீப்பந்தம் ஏந்திய வீரர்கள் காவல் பணியை துவக்குகிறார்கள், கைதி சிறைக்கு இழுத்துச் செல்லப்படுகிறான்.

Best copy available

சோழ வேந்தன் அவை, கற்றறிந்த புலவர் பெருமக்கள், களம்பல கண்ட மறவர் பெரும் படையினர் குழுமியிருந்து அவையை அலங்கரிக்கின்றனர். தஞ்சைக் கோமான்—தமிழ் தரணியைக் கவர்ந்த வெஞ்சமர் வேந்தன் ராஜராஜ சோழன் தங்கச் சிங்காதனத்தில் வீற்றிருக்கிறான்.

கட்டுண்ட இளைஞன் கைதிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறான். குந்தவையின் முத்துப் பல்லக்கிற்கு பிரதம காவலனைகச் சென்ற சோழர் படையின் இளந்தலைவன் கொலுமண்டபத்திலிருந்த அணிவகுப்பின் முன் வரிசையில் முதல்வனாக நிற்கிறான். சோழனுக்கு எதிரேயிருந்த ஒளிமாடத்தில் — மெல்லிய வெண்திரைக்குப் பின்னால் நின்று வழக்கின் விபரத்தை குந்தவை கவனித்துக் கொண்டிருப்பதை அந்த இளந்தலைவன் முன்கூட்டியே அறிந்திருக்கிறான்.

ராஜராஜன் : வழக்கைத் தொடங்கலாம்!

இளந்தலைவன் : வேந்தர்க்கு வேந்தே! கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் இந்த வாலிபர் குந்தவை அம்மையார், மாமன் வீட்டிலிருந்து அரண்மனை நோக்கி வருகையில் எதிர்ப்பட்டவர். எதிரி நாட்டுக்காரர் என்று எங்களால் சந்தேகிக்கப்பட்டவர். சாளுக்கிய சாம்ராஜ்யம் ரணகளப் பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில், சோழமண்ணில் பகை நாட்டாரின் பாதச் சுவடுகள் பட்டால் கூட பேராபத்து என்ற பிரதம தளபதி வல்லத்தரசின் எச்சரிக்கைக் கிணங்க இந்த இளைஞரைக் கொற்றவனின் கொலு மண்டபத்திற்கு கொணர்ந்திருக்கிறேன். நீதி விளக்கேற்றி வரும் ராஜாதிராஜர் தீர விசாரித்து தீர்ப்புக் கூற வேண்டுகிறோம்.

ராஜராஜன்-: வாலிபனே, படைத் தலைவன் குற்றச் சாட்டை நீ ஏற்கிறாயா? அல்லது பதில் ஏதாவது சொல்ல எண்ணுகிறாயா?

இளைஞன்:- அந்நியர் பாதம் பட்டாலே அரசுக்கு ஆபத்து, சிங்காதனத்துக்கு சீரழிவு என்று வீரத்திறகுப் பேர்போன சோழமண்டலம் கருதினால், அந்நியன் என்ற முறையிலே நான் குற்றவாளிதான், சதி செய்து சாம்ராஜ்யத்தைக் கவிழ்க்க வந்ததாக அல்ல! உள் நுழைந்து நும் படையை உருக்குலைத்து சோழ பூமியை சொத்தையாக்க எண்ணியதாக அல்ல! மன்னர்க்குமன்னவனே, மீண்டும் தங்களின் மேலான நினைவுக்குக் கொண்டுவருகிறேன், அந்நியன் என்ற கோரணையில், வெள்ளை உள்ளம் படைத்த வேற்றான் நுழைந்தாலும் சோழம் சாய்ந்து விடும் என்று நீங்கள் கருதினால் நான் குற்றவாளிதான் —தண்டிக்கப்பட வேண்டியவன்தான்.

ராஜசபை இளைஞனுக்கு அனுதாபம் காட்டும் வகையில் அமைதியாக இருந்தது. சோழ படையின் இளந்தலைவனின் கண்கள், இளவரசி தன்னைப் பற்றி ஏதும் தவருக எண்ணி விடுகிருளோ என்ற அச்சத்தோடு ஒளிமாடத்தைத் தொட்டுத் தொட்டு வருகின்றன.

அதுவரை சிலையாக இருந்த சோழன் மன்னன் பேசுகிறான்

ராஜ:- உன்னுடைய வென்கலத் தொண்டையும், வீறுடைத் தமிழும் இந்த சோழ சாம்ராஜ்யத்தின் சிற்ப சித்திரக் கூடத்தில் மோதி எதிரொலிப்பது நெஞ்சைக் கவரும் அழகுமிழும் காட்சியாகத் தானிருக்கிறது தம்பி! ஆனால் இந்த ராஜசபை கூடியிருப்பது, வாலிப மிடுக்கின் எடை என்ன, பருவத் துடிப்பின் எல்லைக் கோடு எது என்பதை அறிய அல்ல இளைஞனே! கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும்நீ, வேற்று நாட்டின் வேவு காரன் என்பது சோழ ராஜ்யத்தின் குற்றச் சாட்டு! இதை நீ ஒப்புகிறாயா? இதுதான் ராஜாங்கத்தின் கேள்வி. என்ன சொல்கிறாய்? கன்னல் தமிழில் பேச எண்ணற்ற இளைஞர்கள் காவேரிக் கரையில் மிகவுண்டு, பாலகனே! கேள்விக்குப் பதில் சொல்!

ராஜராஜ சோழன் சற்று ஆவேசமாகவே பேசினான். திடீரென்று அவையிலிருந்த அமைதி குலைந்தது. யாருக்கும் தெரியாமல் எவர் கண்ணுக்கும் படாமல் ஒரு செய்திச்சுருள் மன்னன் மடியில் விழுந்தது. ராஜ ராஜ சோழன் ஓலையைப் படிக்கிறான். முகப் பொலிவு மங்குகிறது. புருவங்கள் வளைந்து, வளைந்து நிமிர்கின்றன. வீரக்கதைச் சொல்லும் ராஜராஜசோழனின் கொத்து மீசை நீளுவதும் சுருங்குவது மாக இருக்கிறது.

ராஜ:- தீர்ப்பு ஒத்திவைக்கப் படுகிறது. சபை கலையலாம்.

அவைக் கூடத்தின் பின் கட்டு வழியாக சோழன் தனி அறை செல்கிறான். இன்மொழிப் புலவர்கள், இசை வாணர்கள் இதயக் குழப்பத்தோடு கலைகின்றனர்.

★ ★ ★

ராஜராஜ சோழனின் எண்ணம் குழம்பியிருக்கிறது. ராஜ சபையில் வீசியெறியப் பட்ட அந்தச் செய்திச் சுருளை மறுபடியும் விரிக்கிறான்: படிக்கிறான்.

மன்னர் பிரானே,

தங்கள் திருமகளின் முத்துப் பல்லக்கைத் தூக்கி வந்தவரில் நானும் ஒருவன். கைது செய்யப் பட்ட அந்தக் ஒற்றனிடம் நமது இளவரசி உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டார் என்பதை நான் நன்கறிவேன். அந்த ஒற்றனுக்கு தாங்கள் கொடுக்கும் தண்டனை நமது இளவரசியையும் பாதிக்குமோ என அஞ்சுகிறேன். குந்தவை அம்மையாரின் ஆவி அந்த விரோதியின் வாழ்வில் பிணைக்கப் பட்டு விட்டது எனறே நான் கருதுகிறேன். சோழவள நாட்டின் நல்வாழ்வில் பற்றுக் கொண்டவன் என்ற முறையில், ராஜவிசுவாசத்தோடு சொல்லி விட்டேன், பிறகு ராஜ நோக்கம் எப்படியோ?

இப்படிக்கு
சோழர் படையில் ஒருவன்!

சோழமன்னன் முகத்தில் சோகத்தின் சாயல் படிகிறது. காலத்தின் ரேகைகள் வலை பின்னத் துடிக்கின்றன.

அப்போது அந்தப்புரத்து வாயில் காப்போன் ஓடி வருகிறான். மன்னர் திடுக்கிட்டு எழுகிறார். சேவகன், வேந்தன் அருகில் சென்று ஏதோ செய்தி சொல்லுகிறான்.

மன்னன்:- உனக்கு எப்படித் தெரியும்?

சேவகன்:- இன்றிரவு எனக்கு அந்தப் புரத்தில் காவல் பணி! மேலும் இளவரசி, சேடியம்மாளிடம் சொல்லும் போது நான் இந்தக் காதால் கேட்டேன் அரசே!

மன்னன்:- சரி, நீ போகலாம்!

அறையில் அமைதி நிலவுகிறது. சோழனின் கருவிழிகள் பலகணிவழியாக அந்தப்புரத்தை ஊடுருவிப் பாய்கின்றன. குந்தவையின் ஊஞ்சல் கூடத்தில் சிமிழ் விளக்கு எரிந்து கொண்டிருப்பது தெரிகிறது. மன்னன் தனக்குத் தானே பேசிக் கொள்கிறான: "மன்னாதி மன்னவனும் எதிர்க்க வொண்ணு மாகீர்த்தி பெற்ற ராஜராஜ சோழனின் மகளுக்கு துப்பறிய வந்த ஒற்றன் மீது காதல்! துர்த்தை! சோழ பரம்

★ தொடர்ச்சி 10-ம் பார்க்க

‘பரிமேலழகர்’ களே, புதுவைக்குரல் கேளுங்கள் !

மதுரை திராவிடர் இளைஞர் கழகத்தாரால் (ஒய். எம். டி. ஏ) டிசம்பர் கடைசியில் விக்டோரியா எட்வர்டு மண்டபத்தில் குறள் மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொற்பொழிவாற்றுகையில், "திருக்குறளில் வருகிற பகவன் என்பது பகவான் என்ற வட சொல்லின் சிதைவு என்று சொல்லப்படுகிறது இது வட சொல்தான என்பதில் எனக்கு அதிக ஐயப்பாடு ஏற்பட்டு விட்டது. " என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், "திருவள்ளுவருடைய தாய் பெயர் ஆதியென்றும், தந்தை பெயர் பகவன் என்றும், தாய்புலைச்சி என்றும், பகவன் உயர்குலத்தைச் சார்ந்தவர் என்றும் கதை எழுதியிருக்கிறார்கள் வள்ளுவர் அறிவுடையவர் எனவே அவர் உயர்குலத்தில்தான் பிறந்திருக்க வேண்டுமென்று நினைக்கும்படி இந்தக் கதையை அவர்கள் அழகாக எழுதியிருக்கிறார்கள்.

"பரிமேலழகர் ஆதிபகவன் என்பதை வடமொழித் தொடர் என்றாக்கிக் கொண்டு பொருள் கொள்கிறார். பகவான் என்று வடமொழிச் சொல் இருக்கிறது. அதிலிருந்து சிதைந்தது பகவன் என்கிறார், அப்படிச் சொல்லுவது பொருந்தாது. ஏனெனில் தமிழ் இலக்கணப்படி பார்த்தால் பகவு என்பது பகுதி. அன் என்பது ஆண் பால் விகுதி. எனவே பகவன் என்ற சொல்லுக்கு நடுநிலைமை உள்ளவன் என்பது பொருள்; ஆ என்பது ஆ பகுதி, தி என்பது தொழில் விகுதி; ஆதல் தானே யாதல் ஒன்று; இவை அனைத்தும் மூலப் பகுதியிலிருந்து தோன்றியவை.

இதுபோலவே "ஆ பயன்குன்றும் அறு
தொழிலோர் நூல் மறப்பர், காவலன் காவான் எனின்"

என்ற குறளுக்கு அரசன் நன்ருக ஆட்சிபுரியவில்லையென்ருல் அங்கே பசு பால் கறக்காது; வேதம் ஓதுதல் போன்ற அறுதொழிலும் செய்து வருகின்றார்களே, அவர்கள்அப்படி வேதம் ஓதுதல்போன்ற தொழில்கள் கெட்டுவிடுமாம். இதைப் பார்க்கும்போது இது தமிழ்க் குறள்தானா என்ற ஐயம் தோன்றுகிறது. இதனுடைய பொருளை நாம் நன்ருக ஆராய்ந்து பார்த்தால் 'ஆ பயன்' என்ருல் ஆகின்ற பயன் என்று பொருள். அதாவது ஆட்சி செய்து கொண்டிருந்த போது இருந்த பயன் குன்றும். இது இறந்த கால வினைத் தொடர். நன்கு ஆட்சி செய்தபோது என்னென்ன பலன் கிடைத்ததோ அந்தப் பயன் அளவு குன்றும். அறு தொழில் நூல் மறப்பர் என்ருல், உழவு, வாணிகம், கல்வி, வரைவு, தச்சு முதலிய 6 தொழில்கள். அந்தக் காலத்தில் ஆட்சி அறுவகைப் பிரிவையுடையது. 6 அமைச்சர்கள் இருந்தார்கள். அரசு நன்ருக நடை பெறவில்லையென்ருல் இந்த ஆறு அமைச்சர் அலுவலகங்களும் நடக்காது என்று சொல்லிவிட்டார் திருவள்ளுவர். தமிழர் ஒழுக்கத்திற்கும் விழுப்பத்திற்கும் நூல் செய்த திருவள்ளுவர் வேதம் ஓதுதல் போன்ற அறுவகை தொழிலுக்கா நூல்செய்திருப்பார்" என்ருர்.

தலையங்கம்

சென்னை [7—1—55] வெள்ளி

பரிதாபப் படுகிறோம்!

விழுதுகள் விட்டு—ஆணிவேர் கொண்டு—விண்முட்டுமளவுக்கு வளர்ந்திருக்கும் ஆலமரத்தை, காற்றடித்தவுடன் தலைகவிழும் தர்ப்பைக்கு ஒப்பிடுவோரை பிறவிக் குருடர்களென்போம்—பாரதம் காட்டும் கௌரவர்களின் தந்தை என்று சொல்வோம்!

அத்தகைய 'திருதராஷ்டிரர்' ஒருவர்தான் சென்ற கிழமை சென்னையிலிருந்து அலகாபாத் சென்றிருக்கிறார்; பிரிவினை மோகத்தால் வரலாற்றில் படிந்திருக்கும் மருவினைத் துடைக்க தென்னகத்தில் வீசிவரும் புயற்காற்றை புழுதிக்காற்று என்று சொல்லியிருக்கிறார்—அனல்பட்டு கரையும் மெழுகென்று செப்பியிருக்கிறார்! இதோ அவர் பேசியதன் சுருக்கம்:

"இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும் திராவிடர் இயக்கம் இயற்கையாகவே செத்துமடியும்; அந்த இயக்கங்களைப் பற்றி எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகப்பேசுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது"

வடக்கு சென்று, தென்புலத்தின் நிலைமை—விளக்க முறைத்தவர், பொது வாழ்விலே ஈடுபாடு கொண்டு—அன்றாட நிகழ்ச்சிகளை விமர்சித்துத் தீரவேண்டிய அரசியல்வாதியல்ல; சென்னை திபலாஜிகல் பள்ளி ஆசிரியர்கள் தூதுக்குழுவின் தலைவரான **பாலகிருஷ்ண ஜோஷி**தான் இப்படி சொல்மாரி பொழிந்துள்ளார்!

திராவிடர் இயக்கம் இயற்கையாகவே செத்து மடியுமாம்—

பள்ளி ஆசிரியக்குழுவின் தலைவர்—கல்வி நிர்வாக முறையைப் பற்றியோ, ஆசிரியர்களின் தற்போதைய ஊதிய வசதிகளைப் பற்றியோ பேசியிருக்க வேண்டும்! அதைவிட்டு; தீர்த்த யாத்திரைக்காக காசிக்கு சென்றவர் வீட்டுத் தோட்டத்திலே காய்த்துத் தொங்கும் ஒட்டு மாங்கனியை அணில் கொத்திப் போகுமே, என்று விசாரப் பட்டதைப்போல அலகாபாத் நகரத்திலே, இந்த ஆசிரியர், திராவிடர் இயக்கத்தைப் பற்றி கவலைப் பட்டு—கசிந்துருகி—அதன் வருங்காலத்தைப் பற்றியும் ஆருடம் கூறியுள்ளார்!

அதோடு நின்றாரா அந்தத் துரோணாச்சாரியார்? இல்லை,

"ஒரே நாட்டினுடைய பாகங்களாயிருக்கிற வடக்கிற்கும்—தெற்கிற்கும் இடையிலே இருக்கிற **வேறுபாடுகளைக்** களைந்தெறிய வேண்டிய காலம் வந்து விட்டது" என்றும் கூறியுள்ளார்.

வடக்கிற்கும், தெற்கிற்கும்—**வேறுபாடு** இருக்குமாம்—இருந்த போதும் அவைகளைக் களைந்தெறிய வேண்டுமாம்.

நிறையுடம்பைச் சிதைக்க குஷ்டரோகம் பரவி வருகிறதாம்—இருந்தாலும், குறையுடம்பைப் பற்றிக் கவலை கொள்ளாமல் வளர விடுக்க வேண்டுமாம்!

—வேறுபாடுகள் இருப்பதை ஒப்புக்கொண்டு, அவைகளைப் பற்றி சிந்தனை செய்யாதிருக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கும் ஜோஷியின் பேச்சிற்கு இப்படித்தான் நாம் பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது.

தோழர் ஜோஷியின் பேச்சிலே நேர்மையின் சாயலோ, உண்மையின் பிரதிபலிப்போ இருப்பதாகப் புலப்படவில்லை. இந்தியை எதிர்ப்பது ஒன்றுதான் திராவிடர் இயக்கத்தின் இலட்சியமென்று கூறி நமது பிரிவினை தாகத்தை அலட்சியப்படுத்துவதாக அலகாபாத் வாசிகளுக்குக் காட்டும் தோரணையில்தான் அவரது பேச்சு அமைந்திருக்கிறது.

கதிரவன் போல்கொள்கைக்கதிர் பரப்பி எதிர்ப்போரின் போலி வாதத்திற்கெல்லாம் சரியான பதில் எழுப்பி, தென்புலத்திலே நிறைந்திருக்கும் இனஉணர்ச்சிப் பட்டாளத்தைத்தான் பாலகிருஷ்ண ஜோஷி இயற்கையாகவே செத்து மடியும் 'இயக்கமென்கிறார்; வெயில் பட்டவுடன் வாடிக் கருகிவிடும் காளான் என்கிறார்; கணநேரமே உயிர் வாழும் ஈசல் என்கிறார்!

உண்மையிலேயே திராவிடர் இயக்கம் மடிவதாயிருந்தாலும், அதுகூட திராவிடநாடு திராவிடர்க்கான தனிப்பெரும் திருவிழாவன்று—இலட்சிய இமயத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்த அந்த இன்ப நாளன்றுதான் மடியும் என்பதை ஜோஷியாருக்கு நம்மால் எடுத்துச் சொல்லாமலிருக்க முடியவில்லை.

கருங்கற் பாறையாய் திராவிடர் இதயங்களில் நிலைத்துவிட்ட நமதியக்கத்தை, தோன்றி மறையும் மின்னலென்போர்-ஓடி—ஒளிந்து கொள்ளும் வானவில்லென்போர் நாம் முன்பு குறிப்பிட்டபடி திருதராஷ்டிரர்களாகத்தான் இருக்கவேண்டும்-அந்த கருத்துக்குருடர்களுக்காக நாம் பரிதாபப்பட வேண்டியதாகத்தான் இருக்கிறது!

ஆசிரியர் மு. க. உடல்நிலை

ஆசிரியர், மு. க. அவர்களுக்கு கடந்த ஆகஸ்டு திங்களில், பரமக்குடி பொதுக் கூட்டத்திற்கு சென்று வருகையில் நிகழ்ந்த மோட்டார் விபத்தின் எதிரொலியாக கண்ணில் கோளாறு ஏற்பட்டிருந்தது. அதிக சுற்றுப் பிரயாணங்களாலும், எழுத்துப் பணியாலும், வேதனை வளர்ந்துவிட்டது. அதோடு 'முரசொலி' இதழுக்கும் கதை, கட்டுரைகள் எழுதி வந்திருக்கிறார். அண்மையில், 'முரசொலி' பொங்கல் மலருக்காக ஓய்வில்லாமல் எழுத ஆரம்பிக்கவே கண் கோளாறு முற்றி கடந்த வாரம் மு. க. அவர்கள் பெருத்த உபாதைக்குட்பட்டுவிட்டார். இன்னும் அவர் படுத்த படுக்கையாகத்தானிருக்கிறார். தற்போது கண் வேதனை சற்று குறைந்திருக்கிறது. ஆனால் கண்களை இன்னும் சரியாகத் திறக்க முடியவில்லை. கை தேர்ந்த டாக்டர் ஒருவர் சிகிச்சை செய்து வருகிறார்.

அறிஞர் அண்ணாவும், முன்னணி வீரர்களும் வந்து வந்து பார்த்துச் செல்கிறார்கள். அண்ணா அவர்கள் பூர்ண ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி வலியுறுத்திச் சென்றிருக்கிறார்கள். கலையுலக பிரமுகர்கள், நடிகர்கள் தினம் தினம் வந்து பார்த்துச் செல்கிறார்கள்.

டாக்டர்களும், மு. க. அவர்களை இன்னும் சில மாதங்கள் ஓய்வு பெற்றுத் தானாக வேண்டும் என்று எச்சரித்திருக்கிறார்கள்.

மு. க. அவர்களின் மறு அறிக்கை வரும் வரையில், ஒப்புக் கொண்டுள்ள கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வெற்றி இனி ஏது?

ஒரு காலத்தில் மக்களின் இதயமெல்லாம் உணர்ச்சி வேகம் பாய்ச்சி வந்த காங்கிரஸ், இன்று தேர்தலிலே, அந்த நாளில் எந்த மக்களால் போற்றி புகழப்பட்டு வந்ததோ, அவர்களாலேயே தோற்கடிக்கப்படுகிறது என்பதை நினைக்கும்போது, அரசியலே நேர்மையும், ஒழுக்கமும் கொண்டவர்கள் அந்தக் காங்கிரசின் வீழ்ச்சிக்காக வருந்தத்தான் செய்கிறார்கள். காங்கிரசின் செல்வத் திருமகனும் தேவதாஸ் காந்தி நடத்தும் பத்திரிகையே காங்கிரசை கண்டிக்கிறதென்றால் காங்கிரசை பிடித்திருக்கும் பிணிக்கு இனி மருந்துவம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அண்மையில் உ. பி. உப தேர்தலிலே காங்கிரஸ் மண் கவ்வியது குறித்து தேவதாஸ் காந்தியின் 'இந்துஸ்தான் டைம்ஸ்' பேசுகிறது கேளுங்கள்;

"சென்ற வாரம் சிராத்து—மஞ்சன்பூர் தொகுதி சட்டசபை உப தேர்தலின், முடிவு உ. பி. யில் காங்கிரசின் செல்வாக்கு நாளுக்கு நாள் சீரழிந்து வருவதை எடுத்துக்காட்டுகிறது. நேருவின் சொந்த ஜில்லாவில்—மத்திய சர்க்காரிலும், மாகாண சர்க்காரிலும் அமர்ந்திருக்கும் பல மந்திரிகளின் சொந்த ஜில்லாவான இந்த ஜில்லாவில்—காங்கிரஸ் உப தேர்தலில் கோட்டை விட்டுவிட்டது.

காங்கிரஸ் இனி வெற்றி பெறுவது மிகக் கடினம் என்ற ஒரு நிலைமையை காங்கிரஸ்காரர்கள் உண்டாக்கிக் கொண்டார்கள்"

முக்கிய அறிவிப்பு

முரசொலி—அடுத்த இதழ் பொங்கல் மலராக வெளிவரும். 21-1-55ம் தேதி முதல் வழக்கம்போல் வார இதழ் வெளியாகும்.

மதுரையிலே தி. மு. க. மாநாடுகள்

ஜனவரி, 8 9, தேதிகளில்

பாண்டியன் தலைநகரில் பாடிவீடு அமைகிறது!

கழக மாவீரர்களே, கவனமிருக்கட்டும்!

புதையல்.....

★ 6-ம் பக்கத் தொடர்ச்சி

பலம் துக்காராமை ராமனிடம் ஒப்படைத்து விட்டு பரிமளத்தின் வீடு செல்கிறார்! அங்கே ஒரே ஏமாற்றம்! ''பரிமளா நேற்றிரவு கள்ளக் காதலனால் தூக்கிச் செல்லப்பட்டு விட்டாள்'' என்று பரிமளாவின் தந்தை ஆத்திரத்தோடு சொல்லுகிறார். வெள்ளியம் பலம் தாண்டவனுக்கு ஆறுதல் கூறிவிட்டு வெளியேறுகிறார். ஆனால் அம்பலத்தின் உள்ளத்தில் அமைதியில்லை. பரிமளத்தை வசப்படுத்தியிருப்பது கடல்கரையில் கண்ட போலீசாராகத் தானிருக்குமென அம்பலம் நினைக்கிறார்.

★

துரையின் கோஷ்டியுடன் புதுப்பட்டணம் சேர்ந்த மாயாண்டிக் கிழவர் உடல் நலம் பெற்று எழுந்து நடமாடுகிறார். அந்த இளங்காதலர்களின் வரலாற்றைத் தெரிந்து சொன்ன கிழவர் துடிக்கிறார். இந்த நேரத்தில் ஒரு உவரும் கையில் கத்தியோடு மறைவில் நிற்கிறது.

துரை தன் கதையைச் சொல்லுகிறான்;

“என் பாட்டன் பெரிய பணக்காரர். தானதர்மங்கள் செய்து தரித்திர நிலை அடைந்து விட்டார். அவர் காலமானபின், பாட்டியின் மேற்பார்வையில் குடும்பம் நடை பெற்றது. என் அப்பாவும், அம்மாவும் மிக ஒற்றுமையாக இல்லறம் நடத்தி வந்தார்கள். டாக்துரையின் தேயிலைத் தோட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டே என் தந்தை சொந்தத்தில் வள்ளிக் கிழங்கும் பயிரிட்டு வந்தார். எனக்கு ஒரு தங்கை உண்டு. பெயர் தங்கம்.

டாக்துரை ஒரு ஸ்திரீ லோலன்! அந்தக் கொடியவனுக்கு என் தாய் வள்ளிமீது ஒரு கண் இருந்து வந்ததாம்! இதற்கு துணைபுரியும் கிராதகச் செயலை காளிமுத்து என்பான் செய்து வந்திருக்கிறான்.

டாக்துரைக்கு மேரி என்று ஒரு மகளுண்டு. அவளுடைய காதலன் ஜோசப். ஜோசப்புக்கு இந்தியாவில் வேலை கிடைக்கவே அவன் இந்தியா பயணமானான்.

மேரி, மேனி மினுக்கு! இளமையைச் சுவைத்து, வாலிபர்களை எலும்புக் கூடுகளாக்கும் அட்டைப்பூச்சியாக மாறிவிட்டாள் அந்த வெள்ளைமாது. கடல் கடந்து சென்ற தன் காதலனை — சித்தமிழந்த ஜோசப்பை மேரி பொருட்படுத்தவில்லை.

ஒரு நாள், என் தந்தை குமாரவடிவு மேரியின் வெறியாட்டத்தில் சிக்கிக் கொண்டார். அந்த வெள்ளைப் பெண், பரம சாது வான என் தந்தையை பலவந்தப் படுத்தி கட்டிப் பிடித்தாள். இந்தக் காட்சியை தற்செயலாகக் கண்ட என் தாய் வள்ளி என் தந்தையை தவறாகப் புரிந்து கொண்டார். அன்றே, என் தாய்-தந்தை உறவில் முறிவு ஏற்பட்டு விட்டது

புதையல்

என் தாய் வள்ளிமீது டாக்துரைக்கு ஒரு கண் என்று சொன்னேனல்லவா! ஒருநாள் வள்ளியம்மா தோட்ட வேலைக்குச் செல்ல வில்லை. இதை யறிந்த தரகன் காளிமுத்துவும், டாக்துரையும் என் தாயார் இருக்கு மிடம் வந்து அவர்களை மிருகத்தனமாக பலவந்தப் படுத்தி யிருக்கிறார்கள். மானம் போய் உயிர்வாழ நினையா என் தாய் அந்த மனித மிருகங்களை கத்தியால் குத்திவிட முனைந்தார்கள் என்னதான் நெஞ்சுர மிருந்தாலும் இரு ஆடவர்களிடம் ஒரு பெண் என்ன செய்ய இயலும்! என்தாய் கைக் கத்தியாலேயே அந்த முரடர்கள் வள்ளியம்மாவை பிணமாக்கி விட்டு ஓடி விட்டார்கள். என் தாயார் சாகுமுன்பாகவே என் தந்தை அங்கு வந்து விட்டார் என்றாலும் வள்ளியம்மா கடைசி நேரத்திலே கூட என் தந்தையிடம் மனம் விட்டுப் பேச வில்லை.

என் தந்தை அதே நேரத்தில் வீட்டில் புகுந்ததை அறிந்த டாக்துரையும் காளிமுத்துவும் போலீசை ஏவினார்கள். கொலைவழக்கு, கையும் களவுமாக பிடிபட்டது என்ற மகிழ்ச்சியோடு என் தந்தையைக் கைது செய்தார்கள். எங்கள் வீட்டுச் சாமான்கள் பரிசோதிக்கப் பட்டன. என் தந்தையின் டைரியில் ‘முதல் தேதி வள்ளி வெட்டப்பட வேண்டும்’ என்று எழுதியிருந்தது. என் தாயாரை டாக்துரை குத்தியதும் முதல் தேதியாகையால் டைரியிலிருந்த அந்த ஆதாரத்தைக் கொண்டு நீதி மன்றம் என் தந்தைக்கு ஜன்ம தண்டனை விதித்தது. ஆனால் என் தந்தை டைரியில் குறிப்பிட்டிருந்தது என் வள்ளியை யல்ல, வள்ளிக் கிழங்கைத்தான் என்று நீதி மன்றத்திலே வாதாட எங்களுக்கு வக்கீலில்லை- வறுமையின் சிறு தாக்குதல் ஒரு குடும்பத்தின் வரலாற்றையே மாற்றி அமைத்து விட்டது

எங்கள் குடும்பத்தின் முழுப் பொறுப்பு என் பாட்டி வசமாயிற்று. தாயில்லாமல் தத்தளித்த என்தங்கை தங்கமும், நானும் எப்படியோ பாட்டியின் கண்காணிப்பிலேயே வளர்ந்து வந்தோம்—முதுமை என் பாட்டியையும் விழுங்கி விட்டது. நாங்கள் அநாதைகளானோம்.

ஒருநாள் ஒரு காவி உடைச் சாமியார் வந்தார். எங்கள் மேல் இரக்கப்பட்டு எங்களை இந்தியாவுக்கு அழைத்து வந்தார்.

அப்போது என் தங்கைக்கு வயது பத்து. நான் வாலிபத்தின் முதற்படியிலிருந்தேன். தென்னாடு வந்து சேர்ந்த நாங்கள் சாளுவ நாயக்கன் பட்டிணம் வந்தோம் — அந்தயோகி மறுநாள் நாடியம் மடாலயத்தில் எனக்கு வேலை வாங்கித் தருவதாகவும், என்தங்கையை பள்ளியில் சேர்த்து விடுவதாகவும் சொன்னார். நாங்களும் இணங்கினோம்.

மருங்கப் பள்ளம் சிவன் கோயில். அன்றிரவு அந்த ஆலயத்திலே தங்க முடிவு செய்தோம். நடுநிசி! விழித்துப் பார்த்தேன்! பயந்து விம்மிக் கொண்டிருந்த என் தங்கையைக் காணவில்லை! சுற்று முற்றும் பார்த்தேன்! சாமியாரையும் காணவில்லை. கத்தினேன், கதறினேன். சற்று தொலைவில் ஒரு கூச்சல் கேட்டது. எழுவானுக்கும், தொழுவானுக்கும் இடையிலே காக்கா மூக்கு நிழலிலே பசும் பொன்! பசும் பொன்!'' இவை தான் அந்தப் பேய்க் கூச்சல்! ஒலி வந்த திக்கை நோக்கி ஓடினேன். ‘நரபலி தந்து விட்டேன் புதையல் எங்கே!’ என்று அதே குரல் மறுபடியும் ஒலித்தது அந்தக் கோரக் காட்சியை இப்போது நினைத்தாலும் நெஞ்சு வெடித்து விடும் போலிருக்கிறது. என் அருமைத் தங்கை துண்டு துண்டாக வெட்டப்பட்டு கிடந்தாள். மருங்கப் பள்ளத்தில் புதைந்து கிடக்கும் புதையலை எடுக்க எண்ணி இந்த நாசகாரியத்தைச் செய்தார். சாமியார், கையில் ரத்தம் படிந்த கத்தியோடு நின்றான். ஏதோ ஒரு சிலை அங்கு நாட்டப்பட்டிருந்தது. எனக்கு ஆத்திரம் தாங்கவில்லை. அங்கிருந்த அரிவாளை எடுத்தேன். சாமியார் ஓடினார் - பின் தொடர்ந்தேன். அந்த வேடதாரி கால் தவறி ஒரு பாழும் கிணற்றில் விழுந்துவிட்டான்.

அவன் செத்து ஒழியட்டும் என்று பெருங் கற்களைத் தூக்கி கிணற்றுக்குள் வீசி எறிந்து விட்டு கால் போன திக்கெல்லாம் நடந்தேன்.

[வளரும்]

ஆங்கிலக் கொத்தன் !

[முல்லை-சக்தி]

இந்த இந்தியத் துணைக்கண்டம் ஆங்கிலேயருக்கா பிரஞ்சுக் காரருக்கா என்ற போட்டியில் வெற்றி பெற்று ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரக் கல்லை இந்த நாட்டில் நாட்டியவன் ராபர்ட் கிளைவ்தான். கிளைவ்தான் பால்யப் பருவத்தில் பிறந்த இடத்தில், "கண்ணாடியை உடைக்க மாட்டேன், காலித்தனங்கள் செய்ய மாட்டேன், காசு தாருங்கள்!" என்று வாங்கிய லஞ்சங்களுக்கு ஆதார மில்லா விட்டாலும் பிற்காலத்தில் ஆங்கில நாட்டின் வளர்ச்சிக்கு அவர் செய்து போன சாதனைகளுக்கு சரிதத்தில் சான்றுகள் அதிகமுண்டு.

1744ம் ஆண்டு தன் 17ம் வயதில் கிழக்கிந்திய கம்பெனியில் ஒரு சாதாரண குமாஸ்தாவாக சென்னை கடற்கரையில் ஆண்டு ஒன்றுக்கு 5பவுன் சம்பளத்தில்—வந்து இறங்கினன்-பிரிட்டீஷ் சாம்ராஜ்யத்தை இந்தியாவில் ஸ்தாபித்த கிளைவ் இவ்வளவு பேரும் புகழும் எய்து வானென்று அவனின் உறவினர்கள்—நெருங்கிய நண்பர்கள் கூட எதிர் பார்த்திருக்க மாட்டார்கள்.

பிற்காலத்தில் கிளைவ் அரிய பெரிய காரியங்கள் செய்து முடித்ததற்கு மனைவியே தூண்டுக்கோலாக இருந்தாள் — தொல்லைகள் அவனை தாக்கிய போது தன் மனைவியின் உற்சாக மொழியிலே அவன் நிம்மதியை—அமைதியை கண்டான்.

அவன் எடுத்த காரியங்களில்-தொடுத்த போரில்-புயல் வீசிய நேரத்தில் தன் மனைவியிடம்-ஒளிவு மறைவு இல்லாமல் எல்லா இரகசியங்களையும் கூறி-ஆறுதலும் யோசனைகளும் அவளிடமிருந்தே பெற்றிருக்கிறுன்.

அவனுடன் குமாஸ்தாவாக பணியாற்றிவந்த அவனின் நெருங்கிய நண்பன் எட்மான்ட மாஸ்கலேன் சகோதரி மார்கெட்டை தனது இல்லத்து ராணியாக்கி கொண்டான் கிளைவ். எட்மான்ட் — கிளைவின் நெருங்கிய தோழன் — கிளைவ் செய்த எல்லா காரியங்களுக்கும் அவன் உடன் இருந்துஉதவி செய்தான், 1746ம் ஆண்டு பிரான்சின் தளபதி லேபர்டோனியஸ் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை தாக்கியபோது—கிளைவும் மாஸ்கலேயுனும்—பாண்டிச் சேரியில் ஆங்கிலேயரின் வசத்திலிருந்த செய்ன்ட்டேவிட் கோட்டைக்கு — இந்தியர் போல் மாறு வேடமணிந்து தப்பிச் சென்றனர்.

மார்கெட் உயர்ந்த ஆங்கிலேயர் குடும்பத்தில் பிறந்தவள் வில்ட்ஷையரிலிருந்த பெரிய ஜமீன் பரம்பரையில் வளர்ந்த குடும்பத்தை சேர்ந்தவர் மார்கெட்டின் தந்தை. முதலாம் சார்லெஸ்—இரண்டாம் சார்லெசிடம் பணிபுரிந்தவர்களின் பரம்பரையை சேர்ந்தவள் அவளின் தாய்.

இராஜாங்க வான ஆராய்ச்சியாளராக பணிபுரிந்தார் அவளின் சகோதரன்.

மார்கெட் மீது கிளைவ் காதல் கொண்டதைப்பற்றி இரண்டுவித கதையுண்டு.

அவளின் நண்பன் எட்மான்டின் அறையில் மாட்டப்பட்டிருந்த எழில் மங்கையின் ஓவியத்தைக் கண்ட கிளைவ்—அந்த ஓவியம் அவனின் சகோதரியின் நிழல் என அறிந்தவுடன் அவளைத் தான் மணந்துக் கொள்வதாக கூறினும் இது ஒரு கதை அவனின் காதலை பற்றி! மார்கெட் தன் சகோதரனுக்கு தீட்டிய கடிதங்களால் கவரப்பட்ட கிளைவ் அவளை சென்னைக்கு வரும்படி எழுதச் சொன்னுன்! இது மற்றொறு ;கதை!

கிளைவ் திருச்சிைப்பள்ளியில் இருந்தபோது மார்கெட் வரும் செய்தியை அறிந்தான். வெகு சீக்கிரத்தில்—செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் நான்கு சுவர்களுக்குள் இருந்த சிறிய மாதா கோவிலில் மார்கெட்டை மனைவியாக்கிக் கொண்டான். இது சம்பந்தமான தஸ்தாவேஜுகள் செயின்ட்மேரிஸ் சர்ச்சில் இன்னமும் இருக்கின்றன. கோட்டை மியூசியத்தில் மணம்—மரணம் அட்டவணையில் ரெவரன்ட் பேப்ரிக்கன்தான் கிளைவின் திருமணத்தை நடத்தி வைத்தார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கிழக்கிந்திய கம்பெனியின் பிரதான சிற்பியான வில்லியம் டிக்சனல் கட்டப்பட்டதுதான் எழில் நிரம்பிய செயின் மேரியின் மாதாகோயில். உள்ளூரில் வசூலிக்கப்பட்ட நன்கொடையால் கட்டப்பட்டது. மேன்மை தங்கிய ஸ்டினிகாம் மாஸ்டர் என்ற செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் கவர்னரால் ஏராளமான நன்கொடை வழங்கப்பட்டுள்ளது. 300 ஆண்டுகளுக்கு முன்னுல் கட்டப்பட்டதானுலும் கிளைவ் தன் மனைவியுடன் நடந்து சென்ற—சலவைக் கல்லால் செய்யப்பட்ட படி கட்டுகளை இன்னமும் நல் முறையில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம்.

சொல்லிவிடுங்கள்

காங்கிரஸ் தலைவர்கள் ஒவ்வொருவரும், மதசார்பற்ற சர்க்கார் என்பதற்கு பலப் பல பொருள் விளக்கங்களைத் தந்து வருகிறுர்கள். மதம், மனித சமுதாயத்தை அழிவுப் பாதைக்கு இழுத்துச் சேல்லும் கொடிய சக்தி என்று உணர்ந்த நம்மைத் தவிர வேறு எந்த எதிர்க் கட்சிக்காரர்களும் அது பற்றிய விளக்கங்களைக் கேட்பதில்லை—அதிலே அவர்களுக்கு நாட்டமில்லை. 'எம்மதமும் சம்மதமே' என்பதுதான் மதசார்பற்ற சர்க்கார் என்பதின் பொருளென்பர் சிலர். 'யார் எந்த மதத்தை பின் பற்றினும், அது பற்றி எங்கட்குக் கவலை இல்லை' என்பர் ஆச்சாரியர் உள்ளிட்ட பலர். அப்படியானல், மக்கள் தான் எந்த மதத்தை வேண்டுமானுலும் பின்பற்றிக் கொள்ளலாம், ஆட்சி பீடம் மட்டும் இந்து மதத்தைப் பின்பற்றுமா? என்றுநாம் கேட்கிறோம். "இல்லை! அதுவுமில்லை! எங்களுக்கும் மதங்களிலே பாகுபாடு கிடையாது எல்லா மதத்தினரும் தான் எங்கள் ஆட்சிக் குடையின் கீழ் வாழ்கிறுர்கள்" என்று உலக நீதி பேசுகிறுர்கள்.

நாகபுரி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஆசீர்வாதம், இந்திய சர்க்கார் மதசார்பற்ற சர்க்கார் என்று சொல்லிக்கொண்டு இந்து மதத்திலே புனிதமான பிராணி என்று கருதத்தக்க பசுக்களுக்கு மட்டும் பாதுகாப்பளிக்க வரிந்து கட்டிக் கொண்டு வருவது கண்டிக்கத் தக்கது என்று சர்க்காரைச் சாடியிருக்கிறுர். கேட்க வேண்டிய கேள்விதான் அது. அதோடு, மத சார்பற்ற அரசு என்று சொல்லிக் கொண்டு இந்துக் கோயில்கள், மடங்கள், மற்றும் சமயச் சொத்துக்கள் இவைகளுக்கு மட்டும் பாதுகாப்பு-பிரத்யேக அதிகாரி, இந்துக்களுக்காக — (பார்ப்பனர்) அவர்களின் போலிக் கலாச்சாரத்தைக் காப்பதற்காக சட்டதிட்டங்கள் ஏன் என்பதற்கும் அரசியலார் தக்க பதிலுரைத்து நமது ஐயத்தைத் தீர்க்கவேண்டும்—அல்லது மதசார்பற்ற சர்க்கார் என்றால் என்னதான் உண்மையான பொருள் என்பதை யாவது திட்டவட்டமாகச் சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் வருக்கொரு டாக்டர் ஆசீர்வாதம் கிளம்பத்தான் செய்வர்—முன் கூட்டியே தெரிவித்து விடுகிறோம் — ஏன் — எச்சரிக்கின்றோம் !

ஒழுக்கம் விற்கிறுர் !

★★★

" பக்தி என்பது " என்ன ?

முப்பத்து முக்கோடி தேவர்களையம், நாற்பத்தெண்ணுயிரம் முனிவர்களையும் தொழுதல், இதிகாசங்கள்—மற்றும், கடவுள் காதைகளைப் படிப்பது — ஆண்டவனின் லீலாவினேதங்களை திருவிளையாடல்கள் என்று எண்ணுவது — அதன் படி நடப்பது.

" பக்திக் காதைகள் எவை எவை ?"

மறைந்து நின்று மாற்றானைச் கொல்லத் தூண்டுதல், வலிமையிலே நம்பிக்கையிழந்து அஸ்திரங்களை நம்பி களம்புகுதல், வாக்குறுதியைக் காற்றிலே பறக்கவிடுதல், தர்மநெறி தவறுதல், வஞ்சனை செய்து மகுடம் சூட்டிக் கொள்ளல்—இத்தனையும் போதிக்கும் சக்கரவர்த்தித் திருமகனை ராமாயணம் ஒரு கடவுள் காதை !

ஒருத்தியை ஐவர் மனைவியாக்கிக் கொள்ளல், சூதாட்டத்தில், மாடு, மனைவி, நாடு அனைத்தையும் ஈடுவைத்தல், பெண்ணின் துயில் உரிதல், வாளால் சாதிக்க முடியாததையெல்லாம் வஞ்சகத்தால் சாதித்தல், இத்தனையும் போதிக்கும் வியாசர் தந்த விருந்தா (!)ன மகா பாரதம் ஒரு கடவுள் காதை !

கடவுள் பிள்ளைக் கறி கேட்டது—இது ஒரு கடவுள் கதை, பிறந்த கோலத்தில் வந்து பிச்சையிட அனுசயாவைக் கேட்டது—இது ஒரு பக்திக் கதை.

இவைகளை யெல்லாம் படித்து பக்தியை வளர்த்துக் கொண்டால்தான் ஒழுக்கம் வளருமென்கிறுர் தப்பித்தேன், பிழைத்தேன் என தர்ப்பார் மண்டபத்தை விட்டு தன் இல்லம் தேடி ஓடிய சி. ராஜகோபாலாச்சாரியார்.

எங்கே, எப்போது என்று கேட்கிறீர்களா ?

டிச. 26-ம் தேதியன்று புரசைவாக்கத்தில் பேசுகையில் பக்தியினுல்தான் ஒழுக்கம் வளருமென்று நீண்டதோர் சொற்பொழிவாற்றியிருக்கிறுர். நீங்கள் நம்புகிறீர்களா இதை ! மேலே குறிப்பிட்டுள்ள கடவுள் கதைகள் ஒழுக்கத்தை வளர்க்கக் கூடியவைதானு ?

புதையல்

மு. கருணாநிதி

இதுவரையில்....

> 'புதையல்' வாசகர்களின் எண்ணிக்கையில் தங்கள் பெயரையும் புதிய உறுப்பினராக சேர்த்துக் கொள்ள எண்ணி ஏராளமான தோழர்கள் முன் கதைச் சுருக்கத்தைத் தரும்படி கடிதமெழுதியிருக்கிறார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இதுவரை இருபது இதழ்களில் தொடர்ந்து வெளியான 'புதையல்' கதையின் சுருக்கம் இந்த இதழில் தரப்பட்டிருக்கிறது. தொடர்ந்து படிக்கத் தவறியவர்கள் இனி பின் தொடரலாம்.
>
> — ஆர்

வெள்ளியம்பலம் மருங்கப் பள்ளத்தில் ஒரு பெரிய புள்ளி — பணபலத்திலல்ல —படை பலத்தில். அந்த ஊர் சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் எங்கேயோ ஓர் இடத்தில் புதைந்து கிடக்கும் பொன் குவியல்களைத் தோண்டி எடுக்கும் முயற்சி பல நாளாக நடந்து வருகிறது. அப்படி ஒரு நாள் வெள்ளியம்பலம் ஜோசியரிடம் நல்ல நாள் பார்த்து இருட்டில் குறிப்பிட்ட இடத்தில் தோண்டிப் பார்க்கச் செல்லும்போது கோயிலுக்குப் பின்புறத்தில் இரு காதலர்களின் உரையாடல் கேட்கிறது. துரையும்-பரிமளமும்தான் அவர்கள் ... துரை, பரிமளத்திடம் 'அதோ அந்த மாமரத்தடிதான் தங்கத்தைப் புதைத்த இடம்?' என்று சொல்லுகிறான் — அந்தவாக்கியம் காதிலே விழுந்ததும் 'எது தங்கத்தைப் புதைத்த இடம்?' என்று ஆவலுடன் அவர்களிடம் வெள்ளியம்பலம் ஓடுகிறார். திடுக்கிட்ட காதலர்கள் —சில மைல்தூரம் ஓடி, வெள்ளியம்பலத்தின் ஆட்களிடமிருந்து தப்பி கடற்கரையில் வானளாவ நிற்கும் மனோரா பக்கம் போகிறார்கள்—நடுகையில் துரை விட்டுச் சென்ற ஒரு செருப்பையும் பரிமளாவின் மேலங்கியையும் வெள்ளியம்பலம் எடுத்துச் செல்கிறார் —மனோரா பக்கம் சென்ற காதலர்கள் மாயாண்டிக் கிழவர் செய்யும் பிரார்த்தனையைக் கேட்கிறார்கள். கிழவர் கள்ளத் தோணியில் போவதற்கு காதலர்கள் தடையாக இருந்து விடுவார்கள் என்று பயந்து அவர்களை அடித்து, கட்டிப் போட்டு மயக்கமுறச் செய்து, தான் தந்த அந்தத் துன்பத்திற்கு விளக்கமும் கொடுத்து விட்டு, கள்ளத்தோணியில் ஏறிக் கொள்கிறார். அவருடைய மடியில் ஒரு சிறு முடிச்சும் தாள் உரையும் இருக்கிறது. பரிமளா துரையிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்புகிறாள்— பின்னிருட்டு — படகு கடலில் போய்க் கொண்டிருந்தது. படகிலே வேறொரு கிழவர்-பெயர் ஐயப்பன். மாயாண்டிக் கிழவனும் ஐயப்பக்கிழவனும் பேச்சை வளர்த்துக் கொண்டு போகிறார்கள். பொன்கிட்டத்திற்கு ஆசைப்பட்டு கொல்லர் குடும்பம் கொலையுண்ட கர்ணபரம்பரைக் கதையை மாயாண்டிக் கிழவர் ஐயப்பக் கிழவனிடம் சொல்லுகிறார். படகு போய்க் கொண்டிருக்கிறது.

வீடு சேர்ந்த பரிமளா தன்னை ஒரு மோகினிப் பிசாசு தூக்கிப் போய் விட்டதாகச் சொல்லுகிறாள்—மகள் மேலுள்ள பாசத்தால் தாயார் அஞ்சலை நம்புகிறாள். தந்தைதாண்டவன் நம்ப வில்லை. மகள்மீது அவநம்பிக்கை ஏற்படுகிறது அவருக்கு. தெருவில் போய்க் கொண்டிருந்த வெள்ளியம்பலம் கூச்சல் கேட்டு தாண்டவன் வீடுவந்து செய்தியை விசாரிக்கிறார், தன்மகளை மோகினிப் பிசாசு தூக்கிக்கொண்டு சென்றிருந்தால் தூக்கிச் சென்ற இடத்தில் ஒரு அடையாளம் கேட்கிறார். போய் பார்த்ததில் பரிமளா சொன்ன அடையாளம் சரியாக இருக்கிறது ஆனால் அந்த இடத்தில் ஒற்றை மிதியடி ஒன்று கிடந்தது. தாண்டவனுக்கு ஐயம் நீங்கவில்லை.

வெள்ளியம்பலத்திற்கு ஒரு சந்தேகம். கடந்த இரவு தான் கண்ட காதல் ஜோடிகள் பரிமளாவும் அவள் காதலனும் தானே என நினைக்கிறார். புதையல் ரகசிய மறிய துடிக்கிறார்.

நடுக்கடலில் மாயாண்டிக் கிழவரும் ஐயப்பக் கிழவரும் வாயாடிக் கொண்டே போகிறார்கள். மாயாண்டிக்கிழவரின் மடியிலே உள்ளசெப்பேட்டை ஐயப்பக்கிழவர் பார்த்து விடுகிறார். அதை எப்படியும் பார்த்துவிட ஐயப்பக்கிழவர் துடிக்கிறார்.

★

இரவு வந்தது. தன் மகள் பரிமளத்தின் நடத்தையிலே சந்தேகப்பட்ட தாண்டவன் அவளை அன்று இரவே தீர்த்து விடுவது என்ற முடிவோடு பரிமளாவின் அறைக்குள் போகிறார். அந்த நேரத்தில் அம்பலத்தால் ஏவப்பட்ட சில முரடர்கள் பரிமளாவை கட்டித் தூக்கிக் கொண்டிருக்கிறார்கள். தாண்டவன் அந்த அறைக்குள் நுழைந்ததும் அந்த முரடர்கள் தாண்டவனையும் கட்டிப் போட்டு விட்டு பரிமளாவைத் தூக்கிக் கொண்டு ஓடி விடுகிறார்கள். கூச்சல் கேட்டு எழுந்த அஞ்சலை மறுபடியும் தன் மகளை மோகினிப் பிசாசு தூக்கிப் போய் விட்டதாகக் கதறுகிறாள்.

★

நடுக்கடலில் போய்க்கொண்டிருந்தபடகை துரை போலீஸ் உடையில் சென்று வழிமறித்து மாயாண்டிக், கிழவரையும் மற்றவர்களையும் கைது செய்து கரைக்கு இழுத்து வருகிறான்.

★

பரிமளாவைத் தூக்கிபோன வெள்ளியம்பலத்தின் ஆட்கள் அவளை மனோராவுக்கு கொண்டு செல்லுகிறார்கள். அப்போதுதான் தன்னை தூக்கி வந்தது வெள்ளியம்பலம் ஏவி விட்ட கைக்கூலிகள்தான் என்பது பரிமளாவுக்குப் புரிகிறது. வெள்ளியம்பலம் பரிமளாவிடம் அவளுடைய காதலன் யார் என்று நிர்பந்தம் செய்து கேட்கவே, பரிமளம் அவளுடைய பள்ளிப் பாதையில் பலஇடையூறுகள் செய்து வந்த துக்காராமை சொல்லி வைக்கிறாள். வெள்ளியம்பலத்தின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதே நேரத்தில் கிழவர்களை பிடித்துவர்ந்த துரையின் கோஷ்டி மனோரா நோக்கி வருவதை அறிந்த வெள்ளியம்பலத்தின் குழுவினர் மிரண்டு ஓடுகிறார்கள். துரை, பரிமளாவின் இக்கட்டான நிலையை அறிந்து அவளை அணைத்துக் கொள்கிறான்.

பிடித்து வரப்பட்ட கிழவர்களில் ஐயப்பன் குழுவினர் மிரட்டிவிரட்டப்படுகின்றனர். துரை,மாயாண்டிக்கிழவரை மட்டும் வசப்படுத்திக்கொண்டு புதுப்பட்டணத்திலுள்ள தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்லுகிறான். இவ்வளவு நெருக்கடியிலும், தன்னை மிரட்டிக் கொண்டிருப்பது போலீஸ்காரர்கள் அல்லவென்றும், தன்னால் மனோராவில் நேற்று துன்பப்படுத்தப்பட்ட இளங் காதலர்கள்தானென்றும் கிழவர் உள்ளூர அறிந்துகொள்கிறார்.

ஆனாலும் அடிக்கடி, தன் மடியிலிருந்த செப்பேட்டை தடவிப் பார்த்துக் கொள்ளாமலில்லை.

★

வெள்ளியம்பலம் பட்டுக்கோட்டைத் தெருவிலே நின்று கொண்டு பரிமளா கூறிய அவளுடைய காதல(!)னை துக்காராமின் விலாசத்தைச் சொல்லி துக்காராமைக்கண்டு, பரிமளா பற்றி ஆசை வார்த்தைகள் சொல்லி துக்காராமை மருங்கப்பள்ளத்திற்கு அழைத்து வந்து விடுகிறார். தங்கத்தைப் புதைத்தஇடத்தை அறியவே அம்பலம் துக்காராமை கூட்டி, வருகிறார்.

ராமன், வெள்ளியம்பலத்தின் வேலைக்காரன். வெள்ளியம்

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

முரசொலி - பொங்கல் மலர்

விலை ரூபாய் இரண்டு

இயக்க சரித்திரத்திலே முதல் முயற்சி! அதுவும் வெற்றிகரமான முயற்சி!

★ அறிஞர் அண்ணாவின் அழகு தமிழ் ஓவியத்துடன் துவங்குகிறது…

இராமன் குற்றமற்றவனா?-
இராமாயணத்தைக் காப்பாற்ற கிளம்பியிருக்கும் இந்த முக்கியமான நேரத்தில் பழந்தமிழ்க் கிழவர் நாவலர் சோமசுந்தரபாரதியார் 'முரசொலி'க்கென எழுதும் இந்தப் பிரத்யேகக் கட்டுரை மூலம் சர்ச்சைகளுக்கு ஒரு சரியான முத்தாய்ப்பு வைக்கிறார்.

பண்பும் பணமும்-
தமிழ்க் காப்பியத்தை முன்நிறுத்தி, நடமாடும் பல்கலைக் கழகமாம் நாவலர் நெடுஞ்செழியன் தரும் நல்லதொரு படப்பிடிப்பு!

நான்கு எண்ணங்கள்-
புறநானூற்றின் பொன்னேட்டிலிருந்து டாக்டர் மு. வரதராசனார் தரும் சிந்தனைச் சித்திரம்.

சேர்ந்தாரைக் கொல்லி-
பொய்யாமொழியைத் துணைக்கழைத்து தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் கொய்து தரும் கனிக்கொத்து.

எனது லட்சியம்-
அன்றும், இன்றும், என்றும், கொள்கை வழுவா என். எஸ். கே. ஏற்றிவைக்கும் இலட்சியத் திருவிளக்கு!

நினைவு அலைகள்-
பொது வாழ்வில் தான் சந்தித்த தலைவர்களைப்பற்றி உள்ளதை உள்ளபடி எழுதுகிறார்-அருமைத் தோழர்—உழைப்பின் உருவம் என். வி. நடராசன்.

எல்லோரும் கேட்டார்கள்-
கேள்விகள் பலகேட்டு புல்லறிவைப் பொசுக்கி எரிந்த நல்லறிவாளர் பற்றி சிந்தனைச் சிற்பி—சி. பி. சிற்றரசு தீட்டும் கட்டுரை.

ஆச்சாரியாரின் சிரார்த்தம்-
அறிவியக்கவாதிகளை வேட்டையாடக் கிளம்பிய ஆணவக்காரர்கள் தலைவரின் வாதத்தை வேரோடு சாய்க்கிறார் பேராசிரியர் அன்பழகன், தன் பொன்னுரையின் மூலம்.

பேசாத வீணை-
அன்பர் அரங்கண்ணல் அழகு தமிழ்ப் பண் எழுப்பும் விதத்திலே தீட்டியிருக்கும் சிறு கதை.

ஏன்-
கவிஞர் கண்ணதாசன் கவின் ஒழுகும் நடையிலே வரைந்திருக்கும் எழுச்சிக் கவிதை.

சிக்கல்-
நாற்றமெடுத்த சமுதாயக் கொடுமைகளின் கொட்டமடக்கும் சிறுகதை—இதை தித்திக்கும் தமிழ் நடை எழுத்தாளர் தில்லைவில்லாளன் எம். ஏ. தருகிறார்.

கேடி-
வழிக்கு விழுந்து, பின்னர் வழிக்குவந்து விட்டவனைப் பற்றி வழக்கறிஞர் இளம்வழுதி பின்னியிருக்கும் சிறு கதை.

கண்களும் காதலும்-
இன்பத்துப்பாலை வைரக்கிண்ணத்தால் வாரி வழங்குகிறார் திருக்குறளார் முனுசாமி.

ஆசியாவின் வீரஜோதி-
கடாரம் கொண்ட சோழர் குலத்தின் தீரம் பற்றி பன்மொழிப்புலவர் அப்பாதுரை தீட்டும் வரலாற்றுப் புதையல்.

கலையும் திரையும்-
கலையிலே பிரச்சாரமா எனக் கதறி அழும் கும்பலுக்கு டைரக்டர் காசிலிங்கம் இலக்கியச் சான்றுகளோடு தரும் இணையற்ற பதில்.

வடபுலம் வென்ற தமிழர்-
போர்க்குணம் கொண்ட தமிழினத்தால் விந்தியத்திற்கு அப்பாலுள்ளோர் சிந்தியிருக்கும் இரத்தம் பற்றி அருமை நண்டர் என். எஸ். இளங்கோ தரும் சரிதக்கட்டுரை.

நக்கீரன் அறுபது-
கவிஞர் சுரதா தீட்டும் நீண்ட கவிதை-உயர் எண்ணங்கள் மலரும் சோலை.

அன்றைய நிகழ்ச்சிகள்-
புதுமை நடிகர் ராஜேந்திரன் தொகுத்து அளிக்கும் நகைச்சுவை கொஞ்சும் நாடக மேடை அனுபவங்கள்.

வாழ்த்துவோம்-
கவிஞர் வாணிதாசன் வார்த்தெடுத்த வர்ணனை ஓவியம்.

ஓவியக்கலையே உலகப் பொதுமொழி-
ஓவிய விற்பன்னர்கள் பாலு சகோதரர்கள் அளிக்கும் அருமையான கலைவிருந்து.

திராவிட மாணவர் அணிவகுப்பு
ஆரூரிலே கால்ஊன்றி இன்று ஆணிவேர் விட்டு வளர்ந்திருக்கும் தி. மா மு கழகத்தின் சிறப்பு மிக்க வரலாற்றுக் காவியம்—போற்றி மகிழ வேண்டிய சாதனை –கருணானந்தம் எழுதுவது!

ஆரை ஈநர்-
தெள்ளமுதூறும் நடையில் முல்லை-சத்தி கோர்த்திருக்கும் முத்தாரம்.

கொல்லாமற் கொல்லும் வறுமை-
சிந்தை குளிர்விக்கும் புதுவை-சிவப்பிரகாசத்தின் உணர்ச்சிக் கவிதை!

வெறும் பேச்சல்ல-
தோழியர் அருண்மொழி பி. ஓ. எல். புதுமைப் பெண்களுக்கு விடுக்கும் அன்பழைப்பு.

உரிமைக்கு வித்திட்ட உத்தமி-
தோழியர் சத்யவாணிமுத்து எழுதும் மேரியின் வாழ்க்கைச் சித்திரம்.

அவன் ஓர் நாத்தீகன்-
தோழர் சிவப்பிரகசம் பி. ஏ. சார்லஸ் பிராட்லாவின் வாழ்க்கை நூலிலிருந்து எடுத்துத்தரும் ஒருபொன்னேடு.

சிதைந்த சித்திரம்-
ரவி தரும் அரசியற் கவிதை!

அஞ்சனு
தோழர் தங்கவேலர் தரும் ஒற்றையங்க நாடகம்!

நாயுக்கு இழிவு-
கவரிமானையும்—தமிழர் பண்பையும் ஒப்பிட்டு தோழர் இளமுருகு தீட்டும் கட்டுரை!

இகவாழ்வு—ப். வாணன் தரும் புதுமைக் கருவூலம்

கருணாநிதி எழுதும் "மணி மகுடம்" — நாடகம் மலருக்குப் பெருஞ்சிறப்பு!

மு. க. வின் "மறந்தி" வருவாள்---மானம் சொல்வான்

— அதுமட்டுமா? பாலு சகோதரர்களின் மூவர்ண உயிரோவியங்கள்—பேசும் பொற்சித்திரங்கள்!

கே. மாதவன் தரும் கண்கவரும் சித்திரம்.

வனப்பும் சிறப்பும் அமைந்த மூவர்ண முகப்புச் சித்திரம் — முரசொலி இராசன் பக்கத்துக்குப் பக்கம் அள்ளித் தெளிக்கும் சித்திரங்கள்!

ஓவியர் ஆனந்தனின் ஓவியத் துணுக்குகள்!

ஓவியர் ரெசாக்கின் கார்ட்டூன்கள்

இவையனைத்தையும் கொண்டு,

கரும்பினும் இனிதாய், கட்டி வெல்லத்தினும் சுவை மிக்கதாய் முரசொலி பொங்கல் மலர் உங்களை நாடிவரப் போகிறது!

தேனூறுஞ் சுனையோ; இன்பவான் மேவிய நிலவோ என சீதளம் சிந்தப் போகிறது!

கண்கவரும் விதத்திலே — இன எழுச்சிப் பண்பாடும் சிறப்பிலே—திராவிடத்து மண் மீட்கும் விடுதலை விருந்தத்திலே — முரசொலி பொங்கல் மலர் முன்னணியில் நிற்கப் போகிறது!

[விமானி]

"ராமபிரானே, உமக்காக நான் சட்ட சபையிலே வாதாடினேனே! உமது கௌரவத்தைக் காப்பாற்ற, கஷ்டப் பட்டேனே, கண்ணீர் வடித்தேனே! எனது மதிப்பை சூரையாடி விட்டாயே இது அடுக்குமா?" இப்படி ஒரு வேண்டற்பா என் காதில் பட்டது. பக்கத்தில் இருந்தவரைக் கேட்டேன். அவரும் அதை உற்றுக் கேட்டு விட்டு. 'இது கனம் மந்திரி சுப்ரமணியத்தின் குரலாயிற்றே" என்றார். "ஏன், அவருக்கென்ன குறை? ஆண்டவனை அவர் எதற்காக கெஞ்சிக் கேட்டுக் கொள்ள வேண்டும்?" என்றேன். பக்கத்திலிருந்தவர் சற்று யோசித்து விட்டு, "ஓஹோ! இருக்கலாம்! இருக்கலாம்!! அகில இந்திய காங்கிரஸ் குழு தேர்தலிலே சுப்ரமணியம் தோற்றுப்போய் விட்டார்—அவருக்கு 'சீட்' கிடைக்கவில்லை—அதற்காகவா இருக்கலாம்" என்றார். "அடபாவமே, அவருக்கா இந்தக்கதி, ராமதூதராயிற்றே அவர்! ஆச்சாரியாரின் பிரதம சீடராயிற்றே! சேச்சே, இருந்தாலும், இந்த சட்டசபை காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ரொம்பமோசம்! இப்படியா நம்பினவரை நட்டாற்றிலே விடுவது!" என்றேன். அதற்கு பக்கத்துப் பேர்வழி, "சீதையைப் பற்றி யாரோ வண்ணான் தூற்றினான் என்பதற்காக ராமனுக்கு கோபம் வந்தது; அதில் அர்த்தமிருக்கிறது—மாற்றானின் பாதுகாவலில் வைக்கப் பட்டிருந்த வளாச்சே சீதை, மாசு படிந்து விட்டது போலிருக்கிறது என்று ராமன் ஆத்திரப் பட்டான். அதனால் உங்களுக்கென்ன கவலை? நீங்கள் ஏன் துடிக்க வேண்டும்? ராமன் கடவுளவதாரமானால் கிண்டல் செய்பவர்களின் நாக்கைத் துண்டித்து விடட்டுமே! அல்லது சீதை தான் பத்தினியாக இருந்தால் எதிரிகளை எரித்து விடட்டுமே—அவர்களுக்கில்லாத அக்கரை உங்களுக்கேன்" என்று சட்ட சபையிலும், வெளிமன்றங்களிலும் சுப்ரமணியரைப் பார்த்து மக்கள் கேட்டார்களே, அந்த மகானுபாவர் கேட்டாரா? விட்டேனுபார் — என்றார். இப்போது சுப்ரமணியத்தின் இந்தத் தோல்விப் படலத்தை நினைக்கும்போது, ஒருவேளை சுப்ரமணியம் அவர்களால் நம்பப்படுகிற ஆண்டவனே (ராமன்) அவர்மீது ஆத்திரப் பட்டு "கம்பன் என்னை அவமானப் படுத்தி விட்டான் — நீ அதைப் புதுப்பிக்கிறாய்—சுயமரியாதைக் கட்சிக்காரர்கள்தான் என்னை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார்கள்" என்று ஆத்திரப் பட்டு இந்தத் தண்டனையைத் தந்து விட்டார் போலும்" என்றார்.

★ ★ ★

நான்காண்டுகளுக்கு முன்பு எதிர் வீட்டிலே ஒரு கிழவர் இருந்தார். அவருக்கு எப்போது பார்த்தாலும் உபதேசம்தான்! என்ன உபதேசம்? "காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா" என்ற கவைக்குதவாத சோம்பேறித் தத்துவத்தையா அவர் சொல்லுவார்? "எதையும் யோசித்துப் பேச வேண்டும் — ஒவ்வொன்றுக்கும் கொஞ்சம்—கொஞ்சம் யோக்யதை வேண்டும்" என்றுதான் அடிக்கடி சொல்லுவார்.

இப்போது அவர் மறைந்து நாளானாலும், புலித்தோல் மீதமர்ந்து புண்ணிய தீர்த்தத்தின் மகிமை பற்றி பேசுவோரெல்லாம் புவியாளும் தர்பாருக்கு யோசனை கூறக்கூடியவர்களாக வந்து விட்ட இந்த நேரத்தில் அந்தப் பெரியவரின் நினைவு வரத்தான் செய்கிறது. மதவாதி அரசியலில் கலந்தால் பாற்குளமும் பாஷாணக் கிடங்காகி விடும் என்று எண்ணுமளவிற்கு அரசியல் வந்து விட்ட பிறகு பாழாய்போன இந்தப் 'பரத கண்டத்'தில்தான் மடாதிபதிகளுக்கு ராஜாங்க மரியாதைகள்-வரவேற்பு வைபவங்கள்! இவை அனைத்தும் குன்றக்குடி அடிகளாரை மனதில் வைத்துக் கொண்டு பேசுவதாக யாரும் எண்ணி விடாதீர்கள், அவர் விஷயமே தனி! அவர் ஓர் திராவிடர்! அவருக்கு ஆரியகுல மகிபர்களின் அன்பும் பாராட்டும் கிடைக்கிறதென்றால் அது ஒரு ஆரிய அஸ்திரமாகத் தானிருக்கும், யார் கண்டது?

தென்னாட்டில் திராவிடர் இயக்கம் வலுப் பெற்று விட்டது. ஆரிய வட்டாரத்தினரால் இனி அவர்களை ஒன்றும் செய்திட முடியாது, 'சூத்திரர்'களாக இருந்தாலும் அவர்களில் உள்ள சமயப் பித்தர்களை — சாஸ்திரப் பிரியர்களைத் தூக்கி விட்டால் தான் நமது முகாம் வலுப் படும் என்று மயிலாப்பூரும், மாம்பலமும் எண்ணியிருப்பது குன்றக்குடி 'திருப்பெருந்திரு'வுக்கு எப்படித் தெரியப் போகிறது? 'தேவியவள் பால் சுரக்க திருஞான சம்பந்தன் கவிஞனான்' என்று எண்ணும் 'பரமசாது' தானே அவர்!

★ ★ ★

கிறிஸ்துமஸ்! ஆமாம் ஜனவரி 25ம் தேதி அன்று கிறிஸ்துமஸ் தான்! சென்னையிலே அன்று அமளி துமளிதான்! ஹோட்டல்களிலே மகிழ்ச்சி ஆரவாரம்! நடுராத்திரியிலே நடுத்தெருவிலே நாடகம்! அப்பப்பா! சொல்லி முடியாது அந்த மகிழ்ச்சி ஆர்ப்பாட்டத்தை! மறுநாட் காலையிலோ?

"அமெரிக்காவிலே கிறிஸ்துமஸ் விழாவில் 500 பேர் பரிதாப மரணம்!" இப்படி ஒரு பத்திரிகைச் செய்தி! மதவிழாவிலே, அதுவும் மகேஸ்வரனே நினைத்து மகிழ்ச்சி பெற்ற திருநாளிலே பிணக்காடு! நெஞ்சு பொறுக்க வில்லைதான். என் செய்வது! கட்டிலிலே சாய்ந்தபடி நிம்மதியாக இருந்தேன். கால்மணி நேரம் சென்று மனதை அமைதிப் படுத்திக் கொண்டு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தேன். குணசீலன் தலை தெறிக்க ஓடி வந்தான். "என்னடா அவசரம்" என்றேன். 'அடுத்த தெருவிலே இருந்த டாக்டருக்கு 'சீரியஸா'க இருக்கிறது. மாரடைப்பாம்! ஆனால் அவரை நம்பி வைத்தியம் செய்து கொள்ள வந்தவர்கள் அவர் வீட்டு வாசலிலேயே இறந்து கிடக்கிறார்கள்'! என்றான். அதே நேரத்தில் பத்திரிகையில் என் கண்ணில் ஒரு சிறு செய்தி பட்டது. 'போப்பாண்டவருக்கு பேச்சு—மூச்சு இல்லை—உடலிலே புதிய ரத்தம் பாய்ச்சியிருக்கிறார்கள் என்பதே அந்தச் செய்தி!

★ ★ ★

பொது வாழ்வில் எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், பிறர்மனம் புண்படுமே என்று எண்ணி ஊற்றெடுத்து ஓடிவரும், கருத்தை தடுத்தால், நிச்சயமாக அவர்கள் வெற்றி பெற முடியாது என்பது எனது முடிவு. இந்த என் கருத்தை கோட்டையூர் டாக்டர் அழகப்ப செட்டியாருக்கு சொல்ல வேண்டுமென்ற ஆசை எனக்கு நெடுநாளாக உண்டு. முன்பு ஒரு முறை சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவிலே பேசும் போது சமுதாயம் கெட்டு விட்டது, கெட்டுவிட்டது, என்று பேசினார். ஆனால் கடைசிவரை அந்த சமுதாயம் ஏன் கெட்டது என்பதை அவர் பேசவே இல்லை. 'அவர் சொல்ல மறந்தது' என்ற தலைப்பில் எதிர்க்கட்சிப் பத்திரிகைகளெல்லாம் கண்டனம் தெரிவித்தன, அழகப்ப செட்டியார் அவர்கள் அந்த முறையை சென்ற வாரம் தென்னிந்தியநாட்டியக்கலா மாகாநாட்டிலும்பின்பற்றியிருக்கிறார். "சில பெற்றோர்கள் அவசரப் பட்டு தங்களுடைய பெண்களுக்கு ஆடல் அரங்கேற்றம் நடத்தி விடுகிறார்கள். 10 வயதுச் சிறுமிகள் மேடையில் ஆட ஆரம்பித்து விட்டார்கள். 'பாவங்'களை அக்குழந்தைகள் எப்படி உணர்ந்து ஆட முடியும்?" என்று பேசியவர், பரத நாட்டியம் முன்பெல்லாம் எப்படி இருந்தது — அந்த ஆட்டக்கலை ஏன் இந்நிலைக்கு—10 வயதுச் சிறுமியர்களின் வசம் ஒப்படைக்கும் கேவல நிலைக்கு வந்தது? பரத நாட்டியம் தேவதாசிகளின் தொழில் என்று இடித்துரைத்த வட்டாரத்தைச் சேர்ந்த வக்கீல்களின் — நீதிபதிகளின் குடும்பங்கள் பரத நாட்டியத்தை தொழிலாகக் கருதிய பின்பு தானே அந்த ஆட்டக்கலை இவ்வளவு ஆட்டங் கொடுத்துப் போயிருக்கிறது என்பதை திரு. செட்டியார் சொல்லாததேனே?

●

வழிக்கு வருகிறார்கள்!

"அடிப்படையான சமுதாய சீர்திருத்தங்கள் இந்தியாவில் செய்யப்பட வேண்டு மென்பது மிக முக்கியம் என நான் நினைக்கிறேன்;

"அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை; இம் மூன்று துறைப் பிரச்சினைகளையும் ஏககாலத்தில் தீர்ப்பதற்கு முனையாவிடில் ஒரு நாடு முன்னேற முடியாது."

"கடந்த ஆண்டுகளில் சமுதாயச் சீர்திருத்தம் பற்றியும், குறிப்பாக தீண்டாமை ஒழிப்பு பற்றியும் நாம் கருதி வந்திருக்கிறோம். இந்து திருமணச் சீர்திருத்தங்கள் பற்றியும் மக்கள் சபையில் பேசுகிறோம். உண்மையிலேயே அத்தகு சீர்திருத்தங்கள் எல்லாம் விரிந்த அரசியல் பொருளாதாரக் கண்ணோட்டங்களுடனேயே செய்யப்பட்டன. சமுதாயத் துறையை நாம் அலட்சியப்படுத்தி விட்டோம். இன்று அடிப்படையான சமுதாய சீர்திருத்தத்திற்கு முக்கியம் தர வேண்டியது மிக அவசியமென நான் கருதுகிறேன்."

மராட்டிய சமுதாய மாநாட்டில்-நேரு.

★ நொண்டித் தங்கை ★

“பணக்காரர்களிடம் இரக்கம் என்பதே கிடையாதா? என்று சலிப்புடன் கேள்வி அனுப்பியிருக்கிறான் பாலன் என்ற சேலத்துத் தம்பி. பணக்காரர்கள் சிலரிடம் இரக்கம் மருந்துக்குக்கூட கிடைக்காதுதான். ஆனால், அத்தகையவர்களதுமனமும் சமயத்தில் மாறிவிடும், சில சம்பவங்களைப் பார்க்கும்போது. அப்படிப்பட்ட இரக்கமற்ற ஒருவர் மனம் மாறிய கதை இவ்வாரம் வருகிறது. சென்னைக் கண்ணன் எழுதிய அந்தக் கதை கீழே; படியுங்கள்:

★

பகல் வேளை—நடைபாதை.

மாணிக்கம் கடையிலிருந்து சாப்பாட்டுக்காக வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தான்.

அப்பொழுது—

‘அண்ணா......அண்ணா.......’ என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். எதிரே அவனை நோக்கி ஒரு தங்கை கையில் கம்பை ஊன்றிக் கொண்டு நொண்டி நொண்டி வந்து கொண்டிருந்தாள்.

ஆனால்...?

‘பொத்’—கீழே இருந்த கல் தடுக்கி வீழ்ந்து விட்டாள் அந்தச் சிறுமி. அதைக் கண்ட மாணிக்கம் உடனே ஓடி அந்தத் தங்கையைத் தூக்கினான். பாவம்! பசியின் களைப்பு அந்தப் பாப்பாவுக்கு. கொஞ்ச நேரம் கழித்தே கண் திறந்து பார்த்தாள்.

‘அண்ணா...ஒரு...காலணா...’ என்று மாணிக்கத்தைப் பார்த்து கையேந்திக் கேட்டாள்.

மாணிக்கத்தின் கையில் ஒரு காலணாவும் கிடையாது. ‘வா தங்கச்சி...காலணா தரேன்’ என்று அவளை சமாதானப்படுத்தி மெல்ல எழுந்து நடத்தி, எதிரே இருந்த சத்திரத்துத் திண்ணையில் உட்காரவைத்தான். “தங்கச்சி! நீ இங்கேயே இரு. நான் சோறு எடுத்து வரேன்” என்று சொல்லிவிட்டு எழுந்தான். நின்று கொஞ்ச நேரம் யோசித்தான். பிறகு நடந்தான்.

சிறிது நேரத்திற்குள்—

கையில் இலை நிறைய சோற்றை எடுத்து வந்தான். பாப்பாவுக்குக் கொடுத்தான். சிறுமியும் சாப்பிட்டு முடித்தாள். அவள் பெயர் வேணி.

“வேணி! நீ இனிமே யாரையும் எதுவும் கேட்காதே! நான் உன் அண்ணன் மாதிரி. அப்பா, அம்மா யாருமே இல்லாத எனக்கு நீ நல்ல தங்கையாகக் கிடைத்தாய்; சரிதானே? நான் போயிட்டு வரட்டுமா?” என்று சொல்லிவிட்டு கடைக்குப் போய்விட்டான்.

மாணிக்கம் அப்பா அம்மா இல்லாதத் தம்பி. அவன் ஒரு செட்டியாரின் மளிகைக் கடையில் வேலை செய்தான். இயந்திரம் மாதிரி உழைத்து வந்தான்.

ஆனால்...? அன்று சிறிது நேரமாகிவிட்டது. ‘செட்டியார் என்ன செய்வாரோ; ஏது செய்வாரோ?’ என்று யோசித்தவாறே கடையை அடைந்தான். செட்டியாருக்கு ஏதோ சாக்குச் சொல்லித் தப்பித்தும் கொண்டான்.

தினம் தினம் அந்த நொண்டிப் பாப்பாவுக்கு — வேணிக்கு வீடு வீடாய்ப் புகுந்து உணவு வாங்கிக் கொடுத்து வந்தான். அதனால், தினமும் கடைக்கு நேரங்கழித்தே போனான். இத்தனை நாட்களாக இல்லாதப் பழக்கத்தை மாணிக்கத்திடம் இந்த நான்கு நாட்களாகக்கண்ட செட்டியாருக்கு கோபம் வராமலா இருக்கும்!

அதட்டிக் கண்டித்தார். ஆனால்...?

ஒரு நாள்—

மாணிக்கம் வழக்கம் போல இல்லாமல், அதிக நேரங் கழித்தும்கூட கடைக்கு வரவில்லை. 1 மணிக்குள் திரும்ப வேண்டியவன், 2 மணியாகியும் வரவில்லை. செட்டியாருக்கோ கோபம் தாள முடியவில்லை. ‘வரட்டும்...’ என்றவாறு கோபத்துடன் இருந்தார்.

அப்பொழுது—

மாணிக்கம் பெரு மூச்சு வாங்க ஓடோடி வந்தான். அவன் முகத்தில் முத்து முத்தாய் வியர்வைக் கொட்டிக் கொண்டிருந்தது. தட்டிவிட்டத் தகரத் துண்டைப் போல கைகள் ‘படபட’ வென்று அடித்துக் கொண்டிருந்தன. அவன் மெல்ல செட்டியார் அருகில் வந்து நின்றானோ, இல்லையோ “டேய், கழுதை! எங்கேடா சுத்தப் போயிருந்தே?” என்றார் செட்டியார் கோபத்துடன்!

“எங்குமில்லே எசமான்...” என்று இழுத்தான் மாணிக்கம்.

செட்டியாருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வரவே, ‘பளார்...பளார்’ என்று மாணிக்கத்தின் கன்னத்தில் அறைந்தார். ‘சீ! என் எதிரே நிற்காதே. போ. போடான்னா..” என்று அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டார். “இனிமே இங்கே வராதே; உனக்கு இங்கே வேலை இல்லே, போ” என்று சொல்லிவிட்டு ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டவராய் வியாபாரத்தில் ஈடுபட்டார்.

மாணிக்கத்திற்கு ஒன்றுமே புரியவில்லை! தலை குனிந்தவாறே சத்திரத்தை நோக்கி நடந்தான். அவனுக்கு சுரம் வருவதுபோல் இருந்தது. உடல் நடுங்க ஆரம்பித்துவிட்டது. ‘விறு விறு’ என்று சத்திரத்திற்கு வந்தான். வேணியிடம் கூட பேசவில்லை. திண்ணையில் படுத்துவிட்டான்.

விஷயம் புரியாத வேணி “அண்ணா......உடம்புக்கு ஏதாவது...” என்று இழுத்தவாறே மாணிக்கத்தின் நெஞ்சில் கையை வைத்தாள். அவனுக்கு சுரம் அனல்போல வீசியது.

“ஒன்றுமில்லே வேணி!” என்றான் மாணிக்கம்.

“இங்கேயே இரு அண்ணா... நான் போய் வைத்தியரைக் கூட்டிக் கிட்டு வரேன்” என்று கம்பை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் வேணி. மாணிக்கம் தடுத்தும் வேணி விடுவிடென்று நொண்டி நடந்தாள்.

வீதியில் ‘பாம் பாம்...’ என்று வேகமாக ஓடிவரும் காரையும் கவனியாமல் சென்று கொண்டிருந்தாள். ஆனால்—

கார் வேணியைத் தள்ளிவிட்டுதான் நின்றது.

‘வேணி......வேணி!’ என்று கத்திக் கொண்டே ஓடி வந்தான் மாணிக்கம். சுற்றியிருந்த கும்பலில் புகுந்து வேணியின் அருகில் வந்தான். அவள் தலையில் ரத்தம் கசிந்தது. மாணிக்கம் ‘வேணி’ என்று கத்திவிட்டான்.

காரிலிருந்து இறங்கி வந்த டிரைவர் வேணியைத் தூக்கி காரில் படுக்க வைத்தார்.

அதே சமயம்—‘மாணிக்கம்!’ என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் மாணிக்கம். எதிரே—

இரண்டு ஆசாமிகள் நின்று கொண்டிருந்தனர். அவர்களிலே ஒருவர் மாணிக்கத்தின் முதலாளி செட்டியார்தான். ‘உம், காரிலே ஏறிக்கொள் மாணிக்கம்’ என்றார் செட்டியார். மாணிக்கமும் ஏறிக் கொண்டான்.

கார் ‘சர்’ எனக் கிளம்பி ‘விர்’ எனப் பறந்தது, ஆஸ்பத்திரியை நோக்கி!

வேணிக்கு பலத்த காயம் இல்லை. ஆனால், அவள் கீழே விழுந்த அதிர்ச்சியில் மடங்கியிருந்த அவள் கால் சரியாகி விட்டது. நோய் நீங்கி விட்டது. நன்றாகவே நடந்தாள். மாணிக்கத்திற்கு ஆனந்தம் தாங்கவில்லை.

வியப்படைந்த செட்டியார் வேணிக்காக மாணிக்கம் செய்த உதவியையும், அவனுக்காக வேணி செய்த உதவியையும் எண்ணி எண்ணி ஆச்சரியப் பட்டார். அவர்களைப் பாராட்டினார். அப்புறம் என்ன?

அன்றையிலிருந்து மீண்டும் மாணிக்கமும் செட்டியார் கடையில் வேலைக்கு அமர்ந்து விட்டான்; வேணியும் அண்ணனுக்குகவும் தங்கையாகி விட்டாள்.

முரசொலி

★

உள் நாடு

ஆண்டு சந்தா ரூ. 6—0—0
ஆறு மாத சந்தா ரூ. 3—8—0
தனி இதழ் 0—2—0

வெளி நாடு

ஆண்டு சந்தா ரூ. 7-0-0
ஆறு மாத சந்தா ரூ. 4-0-0
தனி இதழ் 0-3-0

ஆறு மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

புதிய நூல்கள்

பேராசிரியர்
க. அன்பழகன் எம். ஏ.
எழுதிய ஏடுகள்.

அறிவும் சிந்தனையும்	0-8-0
வளரும் கிளர்ச்சி	0-8-0
தொண்டா? துவேசமா?	0-8-0
வகுப்புரிமைப் போராட்டம் (கம்யூனல் ஜி. ஓ.)	0-12-0
அழகரசி (கதை)	1-4-0

—கிடைக்குமிடம்—
பாரி நிலையம்
59, பிராட்வே
சென்னை-1

தஞ்சை.........

★ 2-ம்பக்க தொடர்ச்சி

'பரைக்கே மானக்கேடு! இவளுக்கா பவழப் பந்தலிட்டு பார் வேந்தர் மத்தியிலே மணம் நடத்த எண்ணினேன்? அவமானம்! அவமானம்!" என்று நெஞ்சோடு நெஞ்சாக பேசிக் கொள்கிறான்.

நகர் காவலன் மணி அடிக்கிறான். சத்தத்தை ராஜராஜன் கணக்கிட்டு முடிக்கிறான். பிறகு தானாக, "நாழிகை ஆகிவிட்டது. காவலன் சொன்ன நேரத்திற்கு இன்னும் இரண்டரை நாழிகை தான் பாக்கி! இல்லை பார்ப்போம் அதையும்!" என்று பேசிக் கொண்டே ஆசனத்தில் இருந்த மேலங்கியை எடுத்து தோளில் போட்டுக் கொண்டு தனியறை விட்டு மாளிகை செல்கிறான் ராஜராஜன்.

காரிருள் வேளை. வயோதிகப் படை வீரன் ஒருவன் முன் செல்ல குந்தவை சிறைக் கூடம் நோக்கிப் பின் தொடர்கிறாள்.

குந்தவை: ஏ, கிழவா, என்மீது ஏன உனக்கு இவ்வளவு அன்பு? அரசிலங்குமரி ஒருத்தி, ராஜ துரோகம் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒரு கைதியை ரகசியமாகச் சந்திக்க துணை புரிந்தவன் என்று உன்மீது யாராவது அரசரிடம் புகார் செய்தால் என்ன செய்வாய்?

பொங்கல் வாழ்த்து

கழகத் தலைவர்களின் படங்களும், பொன் மொழிகளும் கொண்ட மூவண்ண, இருவர்ண பொங்கல் வாழ்த்துக்கள் ஆர்ட் காகிதத்தில் அச்சிடப்பட்டவை கிடைக்கும்.

— விபரங்களுக்கு —
சாந்தி வெளியீடு
திராவிடப்பண்ணை
தெப்பக்குளம் :: திருச்சி

கிழவன்: நம்ப ராஜா, நாலுபேர் சொல்லிவிட்டா அப்படியே நம்பி விடுகிறவரில்லையே இளவரசி? இவன் இந்தக் குற்றத்தை செஞ்சிருப்பானா? ஏன் செய்யனும்? இதெல்லாம் யோசிக்கமாட்டாரா என்ன?

குந்: சரி, சரி, நீ மட்டும், இதை வெளியாக்கி விடாதே! ஆமாம்!

கிழ: எனக்கு எதுக்குங்க இந்தப் பெரிய இடத்துப பேச்சு?

குந்-: கிழவா, நீ இங்கேயே நில்! இதோ வந்துவிடுகிறேன்.

குந்தவை, கையிலிருந்த பெரிய இரும்புத் திறவுகோலால் முதலில் சிறைக் கதவில் தட்டுகிறாள். வைக்கோல் படுக்கையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அவளின் உள்ளம் கவ்விய அந்தக் கைதி திடுக்கிட்டு விழிக்கிறான்.

கைதி: யாரது?

குந்: இந்நாட்டு இளவரசி கட்டளை இடுகிறேன் — எழுந்து வா!

கைதிக்கு ஒன்றும் புரியவில்லை. நடுக்கத்துடன் கதவுப் பக்கமாக வருகிறான். குந்தவையை கூர்மையாக நோக்குகிறான். குந்தவையின் இச்சை கலந்த பார்வை கைதியின் உள்ளத்தில் எறும்பூரச் செய்கிறது.

கைதி: என்ன வேண்டும் இளவரசி தங்களுக்கு? ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்?

குந்: ஒன்றுமில்லை! தங்களை அழைத்துச் செல்லலாமென்று வந்தேன்!

கைதி: ஆரம்பத்திலே அதிகாரத்தைக் கலந்து 'வா, போ' என்றீர்கள்; இப்போது அழைக்க வந்தேன் உங்களை, என்கிறீர்களே எனக்கு ஒன்றும் புரியவில்லை, ராஜகுமாரி.

குந்: புரிய வைக்கிறேன்; வாருங்கள் கோட்டைக்கு வெளியே போய்விடுவோம்.

கைதி: காவல்காரர்கள் இருப்பார்களே!

குந்: பொய்க் கையெழுத்திட்டு, போலி ஓலைச் சுருளை தயாரித்து அரசவைக் கூடத்திலே இருந்த ஆசைத் தந்தையே ஏமாற்றிய இந்தக் குந்தவைக்கு காவலர்கள் எம்மாத்திரம்! வாருங்கள் போகலாம்.

குந்தவை, கரங்கள் கைதியின் கரங்களைப் பற்றுகின்றன. காவல்காரக் கிழவன் வழிகாட்ட அந்தக் 'காதல் புறாக்கள்' ரகசியப் பாதை வழியாக கோட்டையைத் தாண்டிவிடுகின்றன.

அச்சம் நீங்கி, இதுகாறும் அடைபட்டுக் கிடந்த இளமையின் துடிதுடிப்பு இளைஞனின் இதயத்தில் துளிர்விட ஆரம்பிக்கிறது. காதல் மகாஜோதி என்கிறான்; கருத்தைக் கவர்ந்த கட்டழகி என்று வர்ணிக்கிறான், தரணி வாழ் காதலர்க்கு தஞ்சை தந்த தாரகையே — என்றென்றும் எரிந்து விழா இன்பத் தாரகையே என்று சொல்லோவியம் தீட்டுகிறான்.

இதையெல்லாம், வழிகாட்டி வந்த கிழவன் கவனிக்கவில்லை; காதலர்களின் நலம் விரும்பியைப் போல கைவிளக்கை நெஞ்சுவரை தூக்கி சுற்றுமுற்றும் பார்க்கிறான்.

திடீரென்று ஆள் அரவம் தட்டுகிறது. கிழவன், கைகளை பின்புறமாகக் காட்டி காதலர்களை சுவரோரமாக ஒதுங்கிக் கொள்ளும்படி ஜாடை காட்டுகிறான். அதற்குள்ளாக மேல் திசையிலிருந்து இரு குதிரை வீரர்கள் வெகு வேகமாக கோட்டையின் ரகசியப் பாதைக்கு வருகிறார்கள்.

குதிரை வீரன்: டேய் கிழவா! யார் நீ? கோட்டை மதில் ஓரத்தில் உனக்கென்ன வேலை? அதோ ஒளிந்து நிற்கிறார்களே அவர்கள் யார்? இழுத்துவா அவர்களை! களத்திலே வெல்லமுடியாத தஞ்சையை கள்ளத்தனமாக கவிழ்க்க சதி நடக்கிறதோ? பேடிகள்! முதுகெலும்பில்லாதவர்களை என் முன்னுக்கு இழுத்துவா! மீசையாவது இருக்கிறதா என்று பார்க்கிறேன்!

கிழவன் குந்தவையையும், கைதியையும் இழுத்து வருகிறான். குதிரையிலிருந்து ஏவல் புரிவது தன் அண்ணன் ராஜேந்திரன்தான என்பதை குந்தவை தெரிந்து கொள்கிறாள். நெஞ்சு பட படக்கிறது.

குந்: அண்ணா!

ராஜே: குந்தவையா? அவமானம்! அவமானம்!! தமிழ் மண்ணுக்கே அவமானம்! தங்காய்! கோமேதை...?

ராஜேந்திரனுக்குப் பக்கத்தில் நின்ற குதிரை வீரன்—பேச்சை இடைமறித்து கைதியை உற்று நோக்கிவிட்டுப் பேசுகிறான்.

கு. வீ: ராஜேந்திரரே, சற்று பொறுங்கள். முதலில் அவனை விசாரிப்போம். யார் நீ?

கைதி: நான் கைதி! இந்த நாட்டு அரசாங்கத்தால் கைதி செய்யப்பட்டவன்.

கு. வீ: உனது பூர்வீகம்?

கைதி: சாளுக்கிய நாட்டுக்கு உரிமைப்பட்டவன். இடைக்காலத்திலே என் அண்ணனிடமிருந்துஎப்படியோபிரிக்கப்பட்டிருந்தேன். நேற்று அண்ணனைத் தேடி ஓடி வரும்போதுதான் நான் இங்கு கைது செய்யப்பட்டேன்.

தோல்வி, தோல்விதான்!

இராமனை கௌரவிக்க சட்டசபையிலே படாத பாடுபட்ட கனம் சுப்ரமணியம் அவர்கள் அ. இ. கா. க. தேர்தலில் தோல்வி கண்டது பரிதாபத்திற்குரியதுதான். ஆனால் பிற்பாடு, யார் யாரோ ராஜினாமா செய்துவிட்டார்கள் என்று கூறி அந்த இடங்களில் 'தேவை' யானவர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் கனம் சுப்ரமணியமும் ஒருவர். இப்போது சுப்ரமணியம் செலுத்த வேண்டிய நன்றி அவதார புருஷனை! ராமனுக்கல்ல, யாரோ ஒரு மனிதனுக்குத்தான். இராமனின் அருள் பெற்ற சுப்ரமணியம் தேர்தலிலே தோற்றாரென்றால் இந்த இருட்டறை நாடகத்தை சுப்ரமணியத்தின் வெற்றி என்று நாம் சொல்லமாட்டோம்.

கைதி இந்தக் கதையைச் சொல்லும்போது அவன் கண்களில் நீர் அரும்பு விடுகிறது. இது கேட்ட குதிரை வீரன் திடுக்கிட்டு 'தம்பி' என்று அலறி, கைதியைக் கட்டித் தழுவினான். தன் பக்கத்தில் நின்ற சாளுக்கியத்தின் பட்டத்திற்குரியவனின் தம்பிதான், தங்கை குந்தவையின் காதலன் என்று எண்ணி ராஜேந்திரன் மகிழ்கிறான். புது மைத்துனரை தட்டிக் கொடுக்கிறான் — என்றாலும் கிண்டலுக்காகவாவது தன் முகத்தை மாற்றிக் கொண்டு கோபமாகப் பேசுகிறான்.

ராஜ: குந்தவை! நாளைக் காலை உனக்கு தந்தை முன்னிலையில் தண்டனை தரப்படும். இல்லை! போவோம் வாருங்கள்.

கிழ: குந்தவைக்கு தண்டனை தர ராஜ சபை வேண்டாம் ராஜேந்திரா, மணமகளுக்கு அண்ணன் நீ இருக்கிறாய், மணமகனுக்கு அண்ணன்னும் இருக்கிறார் போதாததற்கு நானும் இருக்கிறேன்:

கிழவன் தலைப்பாகையையும் ஒட்டு மீசையையும் எடுக்கிறான். எல்லோரும் திடுக்கிடுகிறார்கள். ஆமாம்—அந்தக் கிழவன்தான் தஞ்சை வேந்தன் ராஜராஜன் என்றால் நமக்கே வியப்பு ஏற்படுகிறதல்லவா!

[இந்தக் கதையை, உள்ளது உள்ளபடிதான் என்று சொல்வதற்கில்லை, புலிகேசி நெடுமாறன், இளவரசி, தென்னாடு, முதலிய கட்டுரைகளை முன் வைத்து எழுதப்பட்டதாகும்.]

— எஸ். எஸ். தென்னரசு.

சுரதா
12, படைவேட்டம்மன் கோவில் தெரு,
குயப்பேட்டை
சென்னை-12

One side of the page is dark

கலை நோட்டம்

'என்னை மறந்து நடித்தேன்'— 'இது இயலாத காரியமென்கிறேன்'
வங்காளி நடிகர் அபிபட்டாச்சார்யா கருத்து

அபிபட்டாச்சார்யா புகழ்பெற்ற வங்காளி நடிகராவார். அவர், தன்னை மறந்து நடிப்பது இயலாதென்பதின் விளக்கமே இந்தக் கட்டுரை.

"நான் படங்களில் எவ்வளவோ கஷ்டமான வேடங்களையெல்லாம் தாங்கி நடித்திருக்கிறேன்.

முதன் முதலில் முகத்தில் 'சாயம்பூசும் இனத்தைச் சேர்ந்த நாங்கள், சில சமயங்களில் தன்னை மறந்து அப்படியே லயித்துப் போய்விடுவோம்' என்ற மிகவும் பகிரங்கமான 'மூட்டை'யைக் கட்டவிழ்த்து விடுகிறவர்களைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்காது; இம்மாதிரிச் சொல்கிறவர்கள் வெறும் வீண் டம்பக்காரர்கள் என்பது என் அபிப்பிராயம். நான் கேமிராவுக்கு முகம் கொடுக்க ஆரம்பித்த காலத்திலிருந்து, விதவிதமான வேஷமேற்று நடிக்கும் சந்தர்ப்பங்கள் பல எனக்குக் கிடைத்திருக்கின்றன. வேடிக்கையான பபூன் வேடத்திலிருந்து, முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட முடவன் வேடம் வரையில், புத்தி சுவாதீனமிழந்த பிரம்மச்சாரி வேடத்திலிருந்து வாய் வீச்சுக்கார ரோமியோ வேடம் வரையிலும், பலதரப்பட்ட பாத்திரங்களைத் தரித்திருக்கிறேன். ஆனால் நான் நடிக்கும் கட்டம் எவ்வளவு உணர்ச்சிமிக்கதாய் இருந்தாலும், நான் தரித்திருக்கும் வேடத்தில் எனக்கு எவ்வளவு ஆர்வமும் ஆசையும் இருந்தாலும், ஒரு நிமிட நேரமாவது என்னையே நோக்கிக் கொண்டிருக்கும் கமிராவின் கண்களின் முன்னால்தான் நான் நின்று கொண்டிருக்கிறேன் என்பதையோ, நான் அபிபட்டாச்சார்யாதான், நடிப்பதைத் தொழிலாகக் கொண்டவன்தான் என்பதையோ நான் மறந்தது கிடையாது, என்பதை நீங்கள் நிச்சயம் நம்பலாம்.

கதகதப்பைக் கக்கிக் கொண்டிருக்கும் பிரகாசமான விளக்குகளின் முன்னால் உடம்பு எரிய நின்று கொண்டு, டைரக்டர் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டே நடிக்கும் நடிகன் தன்னை மறப்பது பெரும்பாலும் சாத்தியமே இல்லை. எங்களது பாவங்களையும் உணர்ச்சிக் குரல்களையும் தன் போக்கில் பதிவு செய்யும் கேமிரா—மைக் இவற்றின் பார்வையில் நாங்கள் இருக்கிறோம். இந்த நிலைமையில் 'தன்னை மறப்பது' என்பதும் நடிப்பின் ஒரு அம்சமாக இருந்தாலொழிய, தன்னை மறந்துவிடும் ஒரு தவறை நாங்கள் செய்ய இயலுமா?

ஒரு நடிகன், தனது கவனம் முழுவதையும், அவன் தாங்கியிருக்கும் வேடத்தில் செலுத்த வேண்டியிருக்கிறது. சில சமயங்களில், அவன் தனது வேஷத்திற்காக, அவனுக்கு மிக அத்யாவசியமான ஓய்வைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கலாம். உதாரணமாக, நியூ தியேட்டர் ஸாரின் 'யாத்ரிக்' என்னும் படத்தில் நான் நடித்துள்ள அந்தப் பைத்தியக்கார பிரம்மச்சாரி வேடத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த வேடத்தை நான் நடிக்க வேண்டும் என்று கார்த்திக் பாபு சொன்னபொழுது, எனக்குக் கொஞ்சம்கூட நம்பிக்கையே இல்லை. அந்தக் கதையின் ஆசிரியர் சன்யால், அந்த வேடத்தின் முழு விவரத்தையும் மிகத் தெளிவாக எனக்கு விளக்கிச் சொன்ன பின்னருங்கூட எனக்குக் கொஞ்சம் சந்தேகம்தான். அந்த வேடத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவே என்னால் முடியவில்லை. ஆகவே நான் ஒரு காரியம் செய்தேன். சமீபத்திலிருந்த 'ஷா ஷங்காட்' என்னும் ஒரு ஸ்தலத்திற்குச் சென்று, சன்யாலின் கதையில் வரும் கதாநாயகனைப் போன்ற குணமுடைய பல பேர்களைச் சந்தித்தேன். அவர்களோடு பழகி வெகு விரைவில் அவர்களுடைய பேச்சு முறை, நடை, உடை, பாவனை எல்லாவற்றையும் புரிந்து கொண்டேன். அவர்களுடைய அடிப்படைக் கொள்கைகளையும், மனோபக்குவத்தையும் கூடத் தெரிந்து கொள்வதற்காக முயற்சியும் செய்தேன். அப்படிப் பல நாட்கள் விடா முயற்சியுடன் பார்த்துப் பழகித் தெரிந்த பின்னர்தான் சன்யாலின் விபரீதப் பிரகிருதிகளான அந்தப் பாத்திரங்களுக்கு இணங்க என்னைப் பொருத்திக் கொள்ள முயற்சித்தேன். படிப்படியாக இந்த குணபாவங்களை ஒரு தெளிவான உருவத்திற்கு அபிவிருத்தி செய்துவிட்டேன். வீட்டில் கண்ணாடிக்கு முன்னதாக நின்று கொண்டு ஒத்திகை செய்ய ஆரம்பித்து இறுதியாக நான் வேடத்திற்குத் தயார் என்று சொன்னதும் கார்த்திக் பாபு மிகவும் சந்தோஷ அடைந்தார்.

உண்மைதானென்று மயக்கமுறச் செய்யும் இன்னொரு முக்கியமான அம்சம் மேக்-அப்தான். அதாவது வேடம் போடுதல். உண்மை வாழ்க்கையில் பலதரப்பட்டவர்கள் அணியும் உடையைப் பற்றியும் நான் குறிப்புகள் எடுத்து வைத்திருக்கிறேன். அவை முற்றிலும் அப்படியே இருந்தாலொழிய எனது நடிப்பு எவ்வளவு நன்றாக இருந்தாலும் பார்ப்பவர்களுக்கு அவ்வளவு ரம்மியமாக இராது.

நான் காமிராவைப் பற்றிய உணர்வோடு இருந்தால்தான் ஒழுங்காக நடிக்க முடியும் என்பதையும் எனது அனுபவத்திலிருந்து கண்டிருக்கிறேன். நான் எனது சுய நினைவை இழந்துவிட்டால்—கதா பாத்திரத்தின் உண்மையான பாத்திரமாகவே மாறிவிட்டால் நான் தாங்கியிருக்கும் வேடத்தைச் சரியாக நடிக்கவே முடியாது.

என்னுடைய நடிப்பு, பாவம், வசனத்திற்கு நான் அளிக்க வேண்டிய மெல்லினம்-வல்லினம் இவை எல்லாவற்றையும் பற்றி மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சரியான நேரத்தில் சரியான விஷயத்தைச் செய்யும்படி எனது மனம் என்னைத் தூண்ட வேண்டும்.

ஆனால் எப்பொழுதும் நான்-நானில்லை; நான் வேஷம் தரித்திருக்கும் வேறொருவனுடைய குணத்தை, நடத்தையை—'பாவ'த்தை பிரதிபலிக்க வேண்டியவன் என்பதையும் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்; இது மிகவும் முக்கியமான விஷயம். விடாத ஒத்திகையின் மூலம் அந்த வேடத்தின் தன்மையை அடைந்துவிட முடியும் என்பது உண்மைதான்.

ஒரு நடிகன் தன்னை மறந்து ஏன் நடிக்க முடியாது என்பதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. அங்குமிங்கும் துண்டு துண்டாகப் படமெடுக்கும் முறையானது, நடிகன் படிப்படியாக உணர்ச்சியைப் பெருக்கிக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. வேடத்தின் ஆரம்பப் பகுதி கடைசியில் படமாக்கப்படலாம், அதேபோல் கடைசிப் பகுதி முதலிலும் எடுக்கப்படும். அதுதான், நடிகர்கள் அவர்கள் தாங்கியிருக்கும் வேடத்தை உணர்வோடு நடிக்க வேண்டும் என்பதற்குரிய முக்கிய காரணம். நாடகங்களில் அப்படியல்ல; கதையின் தொடர்ச்சி அறுபடாமல் மேலும்-மேலும் நடித்துக் கொண்டு போவதால் பாத்திரமேற்றுள்ள நடிகனுக்குத் தன்னையுமறியாமல் ஒரு உணர்ச்சி அவனை நடக்க வைத்துவிடும். ஆனால், சினிமாவில் முன்னால் நடப்பது பின்னாலும், பின்னால் நடிப்பது முன்னாலும் துண்டு துண்டாக எடுக்கப்படுவதால் திடீரென அழவேண்டும்; அதே மூச்சில் சிரிக்க வேண்டும்-நோயாளியாக வேண்டும்-ஆனந்தமாக இருக்க வேண்டும்-சாகவேண்டும்- எழுந்திருக்க வேண்டும், இப்படி நினைத்த மாத்திரத்தில் எதையும் நடிக்க நடிகன் தன்னைத் தயார்படுத்திக்கொள்ளவேண்டியிருக்கிறது! இந்த நிலையில் ஒருவன் தன்னை மறந்து நடிப்பதென்பது அவ்வளவு சுலபமாக முடியாது! அனுபவத்தில் அவன் அந்த நிலைக்குவந்தாக வேண்டுமென்ற நிர்ப்பந்த மேற்படும்பொழுது அவன் எப்படியோ நடித்துவிடுகிறான். இதுதான் உண்மையுங்கூட, இதில் ஒரு சில வெற்றியும் ஒருசில தோல்வியும் அடைகின்றன.

"நான், தன்னை மறந்து நடித்தேன். அதனால் தான் வெற்றி படைத்தது" என்றுவேண்டுமானால் ஒருசிலர் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் 'என்னை மறந்து நடித்தேன்' என்று சொல்லிக்கொள்ள நான் தயாராக இல்லை." ★

வழிக்கு வருகிறார்கள்!

"இந்திய அரசியல் சட்டம் குறிப்பிடுவது போல் 15 ஆண்டுகளில் நீதிமன்றங்களில் இந்தி மொழி அமுல் செய்யப்பட்டால், அது அபாயகரமான விளைவுகளை உண்டாக்கும்."

"கல்வியிலும், நீதிமன்றத்திலும் ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிப்பதில் இந்தி தன்னை சரி செய்து கொள்ள வேண்டுமென்றால், தத்துவம், சட்டம் ஆகியவற்றிற்கு இலக்கியங்கள் தயாராக வேண்டும். அவற்றைத் தயார் செய்ய நீண்ட காலம் பிடிக்கும்."

"15 ஆண்டுகளுக்கு பின்னர், திடீரென நீதி மன்றங்களில், மொழிப் பெயர்ப்புகள், வாதங்கள் குறுக்கு விசாரணைகள் ஆகியவைகளை எப்படி இந்தியில் எடுத்துச்சொல்லமுடியும்?"

"நீதி மன்றங்களில், ஆங்கிலம் வருவதற்கு முன்னர், அது எவ்வளவோ தொல்லைகளுக்கு உள்ளாயிற்று. ஆங்கிலம், நீதி மன்ற மொழியாவதற்கு நீண்டகாலம் பிடித்தது."

வழக்கறிஞர் மாநாடு
சி. பி. ராமசாமி ஐயர்.

கடைசிப்பக்கம்

கழகத் தோழர்களை யெல்லாம் கைத்தறித் துணியை தலையில் சுமந்து வீதியில் விற்கச் செய்த தி. மு. கழகம் இப்போது சும்மாயிருப்பது ஏன்?

சும்மாயிருக்க வில்லை, நண்பரே; ஜனவரித் திங்கள் 7—ம் தேதி முதல் 13-ந் தேதிவரையி லுள்ள ஒரு வாரகாலத்தைக் கைத்தறியாளர் ஆதரவு வாரமாகக் கொண்டாடும் படி அண்ணா அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையை நீர் படிக்கவில்லையா?

ஆஸ்திக சேசரி;- நாகர்

(?) ஓய், எழுத்தாணியாரே! ஊருக்கு ஊர் மேடையமைத்து உங்கள் கழகத்தை எதிர்த்து முழக்கமிட்டு வரும் எங்கள் போன்றவர்களுக்கு உங்கள் அதிகார பூர்வமான பத்திரிகைகள் ஏன் பதில் சொல்வதில்லை?

கத்துகின்ற கழுதைக்கும், உறுமுகின்ற சிங்கத்திற்கும் வித்யாசம் இருப்பதை நாங்கள் புரிந்து வைத்திருக்கிறோம்—அவ்வளவுதான்!

ஆர். மாதவன்—திருப்புத்தூர்

(?) 'புதையல்'—பொங்கல் மலரில் இடம் பெறுமா?

முரசொலி பொங்கல் மலரே ஒரு பெரும் புதையலாயிற்றே!

(?) தற்போது ஆச்சாரியாரின் அன்றாட வேலை என்ன?

நினைவிலே வைகுந்தம் செல்வார், நினைத்தால் கொஞ்சம் 'மேக்பேத்' எழுதுவார். ஒவ்வொரு வேளையில் கடந்த கால வாழ்வை எண்ணி பெருமூச்சும் விடுவார்!

கே. ஏ. கந்தசாமி-கணியூர்

(?) உலகில் நிகழ்வதெல்லாம் விதியால்தான் என்கிறார் என் நண்பர்-இதில் எனக்கு நம்பிக்கையில்லை—நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

கவலைப் படாதீர்கள்! நான் உங்கள் பக்கம் தான்!

இராசன்—கோவிலூர்

(?) பெண்கள் வளையல் அணிவதை நான் வெறுக்கிறேன்—இதுபற்றி உம் கருத்தென்ன?

நீர் வெறுத்து என்ன பிரயோஜனம் தோழரே: அவர்கள் விரும்புகிறார்களே!

டி. சங்கரன்; புறப்புவிளாகம்

(?) பிச்சைக் காரர்களின் லட்சியம் என்ன?

வாழ்வு பொய், அது காற்றடைத்த பை—என்னும் வரட்டு வேதாந்தத்தை உடைத் தெறிவது தான்!

(?) திராவிட நாடு பற்றிய ஒரு கேள்விக்கு பிரபல காங்கிரஸ் பத்திரிகை ஒன்று 'முதலில் அத்தைக்கு மீசை முளைக் கட்டும்' என்கிறதே அப்படி யென்றால் திராவிட நாடு கிடைக்காது என்று அர்த்தமா!

பாகிஸ்தான் கோரிக்கையை முன்பு மரக் குழந்தைக்கு ஒப்பிட்டார்களே; அப்படிப் பட்ட மரக் குழந்தைகளே ஜின்னா உயிரூட்டிய போது, அவர்கள் சொல்லியிட்டிருக்கும் 'அத்தைக்குதான் ஏன் மீசை முளைக்கக் கூடாது?

பொ. கே ரு; வெள்ளலூர்

(?) சேசவாளர் துயர் துடைக்க.